'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 217 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை (24.04.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 03, 0115 886187 - பக்கங்கள் 12 விலை ரூ.50




## 18 மாவட்டங்களில் வெப்பம் நீடிக்கும்

### பல்வேறு நோய்கள் குறித்தும் எச்சரிக்கை

•கே. சுபானி

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை மனித உடலை பாதிக்கும் அளவுக்கு அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், நாட்டின் 18 மாவட்டங்களுக்கான வெப்பமான காலநிலை தொடர்பான எச்சரிக்கை நீடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

02 பக்கம்

# யாழை உலுக்கிய ஐவர் படுகொலை!



க.நாகசுந்தரி | என்.பாலசிங்கம் | சு.மகாதேவன் | பா.பூமணி | எஸ்.நாகரத்தினம்

## நெடுந்தீவில் முதியவர்களுக்கு நேர்ந்த கொடூரம்





- பிரதான சந்தேகநபர் புங்குடுதீவில் கைது
- 'பணத்துக்காகவே கொலைசெய்தேன்' - கொலையாளி அதிர்ச்சி வாக்குமூலம்

02 பக்கம்

## ஆசியாவின் சிறந்த வான், கடல் கேந்திரமாக இலங்கை

### 25 வருட அபிவிருத்தித் திட்டத்துக்குள் உள்ளடங்குவதாக ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



ஆசிய வலயத்தின் முழுமையான விநியோக மற்றும் போக்குவரத்து மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இந்து சமுத்திரத்தின் விமான மற்றும் கப்பற்றுறை கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த...

02 பக்கம்

## மைத்ரியை குற்றவாளியாக்கும் பேராயர், கத்தோலிக்கச் சபை

### பைபிளின் முதலாம் ஏற்பாட்டை சுட்டிக்காட்டி தயாசிறி பேச்சு

•நா.தினுஷா



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் தன்மீதுள்ள தவறை உணர்ந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, கத்தோலிக்கர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களிடமும் பகிரங்க மன்னிப்புக் கோரிவிட்டார். செய்த தவறுக்கு மன்னிப்புக் கோரு [illegible]வர்களை மன்னிப்பதே பைபிளிலுள்ள [illegible] பினையாகும். அவ்வாறிருக்கையில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்[illegible] கை உள்ளிட்ட கத்தோலிக்கர் [illegible] அவரை தொடர்ச்சியாக...

02 பக்கம்



## மொட்டு கட்சிக்குள் பிளவு என்பதில் உண்மையில்லை

### எதிர்க்கட்சிகளின் போலிப் பிரசாரம் என்கிறார் அமைச்சர் பிரசன்ன

•கே. சுபானி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் எவ்வித பிளவும் இல்லையெனத் தெரிவித்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பிரதமர் பதவியை மாற்றுவதாகக் கூறப்படும் கருத்துகள் பொய்யானவை எனவும் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்



தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி செயலகம் மற்றும் அமைச்சுகள் இணைந்து ஏற்பாடுசெய்த 'வசத் சிரிய 2023' நிகழ்ச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு ஷங்கிரீலா கிரீன் வளாகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

### கமெண்ட் கந்தர்...

பேராயர் பிரதம நீதியரசர் இல்லை எண்டு சொல்லுறார் மைத்ரி... அது உண்மைதான் மைத்ரியும் இப்ப ஜனாதிபதி இல்லை தானே பாருங்கோ..!



## ஜனாதிபதியை சந்திக்கும் ஆளும் கட்சி எம்.பிக்கள்

ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று (24) இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

02 பக்கம்

## தேசிய அரசுக்கு சு.க. ஆதரவில்லை

•நா.தினுஷா

தேசிய அரசாங்கமொன்றை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் சர்வகட்சி அரசாங்கமொன்று உருவாக்கப்படுமாக இருந்தால் முழு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

02 பக்கம்

## அரசில் இணையும் ஐ.ம.ச. திருடர்கள்

### தமது கட்சி சுத்தமாகும் என்கிறார் பொன்சேகா

•நா.தினுஷா



தேசிய அரசாங்கம் அல்லது வேறு எந்தப் பெயர்களில் ஆளுந்தரப்பு புதிய அரசாங்கமொன்றை உருவாக்கினாலும் திருடர்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. அதேபோன்று, எங்களுடனும் ஓரிரு திருடர்கள் இருப்பார்களாக இருந்தால் அவர்களும்...

02 பக்கம்

### உஷ்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து போன எம்.பிக்களை கூப்பிட்டு பேச்சு நடத்தினாராம் மைத்ரிபால சிறிசேன.

மீண்டும் கட்சிக்கு வருகிறோம். ஆனால் எடுத்த அமைச்சு, இராஜாங்க அமைச்சுப் பதவிகளை விட்டுவிட்டு வரமுடியாதென நிமல் சிறிபால, லசந்த அலகியவண்ண, சாமர சம்பத், ஜகத் புஸ்பகுமார ஆகியோர் திட்டவட்டமாக மைத்ரியிடம் தெரிவித்துவிட்டனராம்.

வேண்டுமானால் தேசிய அரசில் இணைந்து மைத்ரியும் அமைச்சொன்றை பெறலாமென அந்த நால்வரும் கூறினராம். இதனால் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பியுள்ளாராம் மைத்ரி.




## தேசிய அரசுக்கு...

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர இதனைக் குறிப்பிட்டார். நேற்று இடம்பெற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஆரம்பத்திலிருந்து சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்கவேண்டுமென்றே கோரி வருகிறோம். சர்வகட்சி அரசாங்கம் என்பது பாராளுமன்றத்திலிருக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒரு சபையை உருவாக்கி, அதனூடாக நாட்டை ஆட்சி செய்யும் செயற்பாடாகும். அதனூடாக குறுகிய அமைச்சரவையும் எண்ணிக்கையில் குறைவான இராஜாங்க அமைச்சர்களுமே இருப்பார்கள்.

அதனடிப்படையில், எதிர்வரும் 25 வருடங்களுக்கு தேவையான முறையான வேலைத்திட்டங்களை உருவாக்குவோம் என்பதே எங்களின் கோரிக்கை. எந்த அரசியல் கட்சி ஆட்சி செய்தாலும் எங்களுக்கு பிரச்சினை இல்லை.

ரணில் உள்ளிட்ட எந்த தலைவராக இருந்தாலும் இதனை தனியாக முன்னெடுக்க முடியாது. காரணம் ஏனைய கட்சிகள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக எதிர்ப்பை தெரிவிக்கும். எங்களுக்கு அமைச்சுப் பதவிகள் அவசியமில்லை. ஆனால் நாடு தொடர்பில் எங்களுக்கு பிரச்சினை இருக்கிறது. எனவே, தயவுசெய்து சகல கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு எதிர்வரும் 25 வருடங்களுக்கு தேவையான பொது வேலைத்திட்டத்தை உருவாக்க முயற்சிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சி எடுக்கவேண்டும். இதற்கு அப்பால் மாற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

அவ்வாறு இல்லாமல், தனக்கு ஏற்றவாறு ஒவ்வொரு கட்சிகளிலிருந்தும் உறுப்பினர்களை கொண்டு தேசிய அரசாங்கத்தை உருவாக்கி அமைச்சுகளின் எண்ணிக்கையை 40ஆக அதிகரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் அதற்கு நாங்கள் தயாராக இல்லை. அந்த அமைச்சுகளை நாங்கள் ஏற்கவும் மாட்டோம்.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு மாத்திரமே எங்களின் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்றார்.

## மொட்டு கட்சிக்குள் பிளவு...

தேவையேற்படின் நாடு தொடர்பில் மொட்டு, தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறைந்த தலைவர் ரெஜீ ரணதுங்கவின் 86ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு உடுகம்பளையிலுள்ள அவரது நினைவுதூபிக்கு மலர்தூவி மரியாதை செலுத்திய அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் பதவியை மாற்றுவதற்கான தேவைப்பாடு எதுவுமில்லை. பிரதமர் பதவியை மாற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனக் கூறப்படும் கதையில் உண்மையில்லை. இது வெறும் புரளி. அது எதிர்க்கட்சிகளால் கட்டவிழ்த்து விடப்படும் கட்டுக்கதை.

மொட்டுக்குள் எந்தப் பிளவும் இல்லை. இது தொடர்பில் பொய்ப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேவையான நேரத்தில் மொட்டு, நாடு தொடர்பில் தீர்க்கமான தீர்மானமொன்றை எடுக்கும் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 18 மாவட்டங்களில்...

இதுதொடர்பில் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அதிக வெப்பமான காலநிலை நிலவும் இக்காலப்பகுதியில் மேற்கு, வடமேல், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மொனராகலை, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அந்தவகையில் பொலன்னறுவையிலேயே அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. அங்கு 36.9 செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகிறது. ஏனைய மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் 32 பாகை செல்சியஸூக்கும் அதிகமாக வெப்பநிலை பதிவாகியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வெப்பமான காலநிலை தொடர்வதால் நீர்ச்சத்து குறைபாடு, தசைப்பிடிப்பு, உடற்சோர்வு, மயக்கம், உடற்செயற்பாடு குறைவதால் ஏற்படும் இதய அடைப்பு, இதயத்துடிப்பு அதிகரித்தல் மற்றும் மூச்சுத்திணறல், சுயநினைவின்மை, தலைவலி, வலிப்பு போன்ற உடல் உபாதைகள் ஏற்படக்கூடும் என வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதிக வெப்பத்தால் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என்பதால் பெற்றோர் அவதானத்துடன் இருக்கு மாறு சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி உடல் உபாதைகள் உணரப்படும்போது தமது நடவடிக்கைகளை விடுத்து குளிர்ந்த, காற்றோட்டமான இடத்தில் ஓய்வெடுப்பதுடன் போதுமான அளவு நீர் அருந்தவேண்டும். அத்தோடு ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒருமுறை அரை கப் நீர் அருந்தவேண்டும். உடலை குளிர்ந்த நீரால் ஈரப்படுத்தல் வேண்டும். தொடரும் அதிக வெப்பத்துடனான இக்காலநிலை முதியோர்கள், நோயாளர்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கக்கூடும் என்பதால் அவர்கள் தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் இருக்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

விசேடமாக குழந்தைகளை வாகனங்களில் அழைத்துச் செல்ல வேண்டாம். அத்தோடு முடிந்தவரை வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடைகளை அணியவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது தொடரும் வெப்பநிலை அதிகரிக்கப் படவில்லை என்றபோதும் அது மாறலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

## அரசில் இணையும்...

அரசாங்கத்துடன் இணைந்துகொள்ள வேண்டும். அவ்வாறான திருடர்களும் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டாலே எங்களின் கட்சி சுத்தமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்கு ஒத்துழைக்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கிறோம். மக்களால் நிராகரிக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட இந்த ஆட்சி பொறிமுறைக்கு நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம். ஊழல்வாதிகளின் பங்காளிகளாக இருக்கப்போவதில்லை. அவ்வாறு இருக்கையில் அவர்களுடன் இணைந்து அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஒருபோதும் ஏற்கமாட்டோம்.

நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளியில் செல்லத் தயாராக இல்லை. தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு தலைவர் சஜித் பிரேமதாச இணங்குவார் என்று நான் கருதவில்லை. அதில் நம்பிக்கையாக இருக்கிறோம். அதன் காரணமாக அவர்களின் பாவங்களை கழுவும் செயற்பாடுகளில் எங்களையும் பங்காளிகளாக்கி கொள்ளவே முயற்சிக்கிறார்கள். அதற்கு நாங்கள் பலியாகப்போவதுமில்லை.

தேசிய அரசாங்கம் என்பது வெறும் சொல் மாத்திரமே. திருடர்களுடன் தேசிய அரசாங்கமொன்றை உருவாக்க முடியாது. மக்களின் ஆதரவுடன் திருடர்கள் அற்ற அரசாங்கமொன்றை உருவாக்குவதே எங்களின் நோக்கமாகும். எங்களின் மத்தியிலும் ஓரிரு திருடர்கள் இருந்தார்கள் என்றால், அவர்களும் ஆளுந்தரப்புடன் இணைந்துகொள்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஒருசிலர் அவர்களுடன் இணையப்போவதாக பேசிக்கொள்கிறார்கள். அவ்வாறானவர்கள் போவதே எங்களுக்கும் சிறந்ததாகும். அதனூடாகவே எங்களின் கட்சியும் சுத்தமாகும் என்றார்.

## மைத்ரியை குற்றவாளியாக்கும்...

குற்றவாளியாக்குவது பைபிளின் பழைய ஏற்பாட்டை போன்றதாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கவலை நீதியானது. மைத்ரிபால சிறிசேன இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர் பான தீர்வை பெற்றுக்கொடுப்பார் என்று பேராயர் எதிர்பார்த்தார். ஆனால், இந்தச் சம்பவம் இடம்பெற்று மூன்று வாரங்களில் முழுமையாக ஐ.எஸ். அமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்டது என்பதை தெளிவுப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்யவும் மைத்ரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்திருந்தார். அதன் பின்னர் ஜனாதிபதி குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இருந்தபோதும் இந்தக் குழுவினூடாக உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை உறுதிப்படுத்த முடியாமல் போனது. சம்பந்தப் பட்ட குற்றவாளிகளை வெளிப்படுத்தி அவர்கள் நட்டஈடு செலுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த தாக்குதல் சம்பவம் ஆட்சி மாற்றத்துக்காக மேற்கொள்ளப்பட்டதா, மக்களுக்கிடையே குழப்பத்தை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப் பட்டதா என்பது தொடர்பில் எந்தவொரு விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அதன் உணமைத் தன்மை இதுவரையில் வெளிப்படுத்தப்படவும் இல்லை.

புலனாய்வுத் தகவல் வழங்கியும் அதுதொடர்பில் எவரும் முறையாக செயற்படவில்லை. புலனாய்வு தகவல்களின் பிரகாரம் தேவாலயங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருந்தால் இந்த தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்காது. எனவே, தகவல் வழங்கியவர் குற்றவாளியா அதன்படி செயற்படாதவர் குற்றவாளியா என்பதே தற்போதைய பிரச்சினையாகும்.

மைத்ரிபால சிறிசேன இதுதொடர்பில் மன்னிப்புக் கோரியிருந்தார். கத்தோலிக்க மக்களும் இதனை நன்கறிவார்கள். மன்னிப்பு வழங்குவதே பிரதான காரணம் என்பது பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாகும். அவ்வாறு இருக்கையில் கத்தோலிக்க தலைவர்கள், மன்னிப்புக் கோரிய நபரொருவரை பைபிளின் பழைய ஏற்பாட்டிலுள்ளது போன்று செயற்படவா முயற்சிக்கிறார்கள் என்பது முக்கியமான விடயமாகும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மைத்ரி முறையாக முன்னெடுக்கவில்லை என்று தெரிவித்து கோட்டாபயவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய ஒத்துழைப்பு வழங்கினார்கள். அவர் ஆட்சியேற்று குறுகிய காலத்திலேயே அவரும் செய்யமாட்டார் என்று கூறி, அவரை ஆட்சியிலிருந்து வெளி யேற்றுவதற்காக போராட்டத்துக்கு ஆதரவளித்து ஆட்சி கவிழ்த்தார்கள். தற்போது ரணிலும் அந்த விசாரணைகளை முறையாக முன்னெடுக்க மாட்டார் என்று தெரிவித்து அவரையும் புறக்கணிக்கிறார்கள்.

தற்போது, தான் ஆட்சிக்கு வந்ததும் இதுதொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து சரியான தீர்வைப் பெற்றுக்கொடுப் பதாக சஜித் கூறுகிறார். அவராலும் அதனை செயற்படுத்த முடியாவிட்டால் எதிர்காலத்தில் ஒரு மாதத்தில் அவரையும் வெளியேற்றிவிடுவார்கள். அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இதற்கான நீதியை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

## ஆசியாவின் சிறந்த விமானக்...

வேண்டியது அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்குரிய திட்டமிடல் அரசாங்கத்தின் 25 வருட அபிவிருத்தித் திட்டத்துக்கு உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு - வடக்கு துறைமுகத்தின் 30 வருட அபிவிருத்தி திட்டத்தினை வெளியிடுவதற்கான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு, மேற்கு இறங்குதுறைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தற்போதும் இடம்பெற்று வருகின்ற நிலையில், 2030ஆம் ஆண்டளவில் அவற்றை முழுமைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என்பதாலேயே இரு அமைச்சுகளையும் ஒன்றாக்கியுள்ளோம்.

25 வருடங்களுக்கு எமது திட்டம் என்ன? அவற்றை எவ்வாறு செயற்படுத்தலாம் என்ற மாற்றுச் சிந்தனைகள் அவசியமானதாகும் என்பதோடு இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது, இந்தியா, பங்களாதேஷ், ஈரான் உள்ளிட்ட மக்ரான் கடல் வலயத்தின் மேம்பாடுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. அத்தோடு சுற்றுலாத்துறை வர்த்தக செயற்பாடுகளுக்கு அவசியமான வசதிகளை கொண்டதாக ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் காணப்படுகின்றன.

அடுத்த 25 வருடங்களுக்குள் வங்காள விரிகுடாவை அண்மித்த வலயத்தில் இந்தியா, பங்களாதேஷ், மலேசியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் பெரும் அபிவிருத்திகளை எட்டும் என்ற நிலையிலிருந்து திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தி குறித்து நாம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கிறோம்.

அதற்கமைய திருகோணமலை துறைமுகத்தை வங்காள விரிகுடா வலயத்தின் சுற்றுலா வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பிரதான தளமாக மாற்றியமைக்கக்கூடிய இயலுமை பற்றி தேடியறிய வேண்டியது அவசியமாகும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் தற்போதும் அதன் முழுமையான கொள்ளளவுடன் இயங்கவில்லை என்பதால் அடுத்த 10 - 15 வருடங்களுக்குள் அதனை அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் விரிவாக ஆராய வேண்டியதும் அவசியமாகும்.

மறுமுனையில் கட்டுநாயக்க விமான நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்வதோடு, மத்தள விமான நிலையத்தினை வணிக ரீதியில் மேம்படுத்த வேண்டும். இவற்றோடு வடக்கு மாகாணத்தில் பலாலி விமான நிலையத்தை திறந்துள்ளதற்கு மேலதிகமாக வட மத்திய மாகாணத்தின் உள்ளக விமான சேவைகளுக்காக ஹிங்குரங்கொட பிரதேசத்தை அபிவிருத்திச் செய்துள்ளோம்.

இதற்குள் கொழும்பு - வடக்கு துறைமுகம் பெருமளவான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ள அதேநேரம் அதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலான அறிக்கையொன்றை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசகர்கள் என்னிடம் கையளித்துள்ளனர். அதற்காக நாம் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரானின் அபிவிருத்தி திட்டமிடல்கள் பற்றி வெகுவாக அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட மேற்படி மூன்று நாடுகளினதும் அபிவிருத்தியின் மீதே கொழும்பு துறைமுகத்தின் கொள்ளளவு தங்கியுள்ளது.

இந்தியா 2050ஆம் ஆண்டளவில் உலகின் மிதமிஞ்சிய சனத்தொகையை கொண்ட நாடாக மாறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவின் குஜராத், மகாராஷ்டிரா, தென் இந்தியாவின் ஏனைய பகுதிகளும் குறிப்பாக தமிழ்நாடும் தொழில்மயமாக்கலை நோக்கி வேகமாக நகரும் நிலையில் இந்தியா தொழில்மயமாக்கலில் முன்னேற்றம் கண்டாலும் 2010 சீனா அடைந்த இலக்கை அடைய முடியாத நிலை காணப்படுகிறது. இருப்பினும் இந்தியா அந்த இலக்கை எட்டிப் பிடிக்கும். அது எண்ணியல் சார்ந்ததாக இல்லாமல் வடிவியல் சார்ந்த முன்னேற்றமாக அமையலாம். அதன்படி இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான தொடர்பாடல்கள் எவ்வாறானதாக அமைய வேண்டும், படகுச் சேவைகள் வாயிலான அந்த தொடர்பாடல்களை கட்டியெழுப்பும் இயலுமை உள்ளதா என்பதை ஆராய வேண்டும்.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாகஅங்குள்ள மக்களின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் மீன்பிடித்தல் மற்றும் சுற்றாடல் பிரச்சினை தொடர்பிலும் வெகுவாக அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அத்தோடு நாம் இந்தியாவுடன் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளின் போது, அபிவிருத்தியை துரிதப்படுத்துவதோடு, அதிகளவில் கொள்கலன்கள் அவசியம் என்று அறியப்பட்டுள்ளது. அதற்கான திட்டமிடலை இந்தியாவுடன் கலந்தாலோசித்து உருவாக்கும் பட்சத்தில் குறைந்தளவான வாய்ப்புகள் எவை, அதிகளவிலான வாய்ப்புகள் எவை மற்றும் அவற்றை எவ்வாறு கண்டுகொள்ளலாம் போன்ற விடயங்களை நாம் அறியலாம்.

இன்று நமது நாட்டைப்போன்று பாகிஸ்தானும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டாலும், ஈரானுக்குப் பிறகு வளர்ச்சியடையக்கூடிய நாடாக விளங்குகிறது. மத்திய ஆசியாவையும் ரஷ்யாவையும் இணைக்கும் சபஹர் துறைமுகத்துடன் ஈரான் முன்னேறினால், மக்ரான் கடற்கரையை இலக்கு வைப்பர். எனவே அபிவிருத்தியின்போது மேற்படி சகல விடயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

இதற்கிடையில், சீனா ஆபிரிக்காவுடன் இணைந்து ஆபிரிக்காவின் கிழக்கிலிருந்து மேற்கு வரை ரயில் பாதையை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று கென்யாவிலிருந்து மேற்கு ஆபிரிக்கக் கடற்கரைக்கும், மற்றொன்று கொங்கோ வழியாகவும் செல்லும் என்பது குறித்தும் நாம் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அதற்கமைய, வலயத்தின் அனைத்து விநியோக மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகள் மாற்றமடையும் என்பதால் இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்கு அவசியமான வேலைத்திட்டத்தினை உருவாக்க வேண்டும் என்றார்.

## யாழை உலுக்கிய...

**யாழ். செய்தியாளர்**

யாழ்ப்பாணம், நெடுந்தீவில் முதியவர்களான உறவினர்கள் ஐவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இது தொடர்பில் தேடப்பட்டுவந்த பிரதான சந்தேக நபர் புங்குடுதீவில் பொலிஸாரால் நேற்று (23) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், இச்சம்பவத்தின்போது காயமடைந்த மற்றுமொரு மூதாட்டி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மாவலி இறங்குதுறையை அண்டிய 12 ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையில் உள்ள வீடொன்றிலேயே மூன்று பெண்களினதும் இரு ஆண்களினதும் சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன.

லண்டன் பிரஜாவுரிமை பெற்ற வேலாயுதம் பிள்ளை நாகேந்திர ரத்தினம் (வயது78) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான நாகநதி பாலசிங்கம் (வயது82), பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை (வயது76), கார்த்திகேசு நாகேஸ்வரி (வயது83), மகா தேவன் (வயது75) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். மேலும் நூறு வயதான கனகம் பூரணம் என்ற மூதாட்டி பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு இறங்குதுறைக்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் மூதாட்டியொருவர் அங்கு வருகைதருவோருக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல், உணவு வழங்குதல் போன்றவற்றை தொழிலாக செய்து வந்துள்ளார்.

இவரது கணவர் 1986ஆம் ஆண்டு குமுதினி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்ட பின்னர் குறித்த மூதாட்டி தனது வாழ்வாதாரத்தை தானே கொண்டு நடத்தி வந்துள்ளார்.

நெடுந்தீவில் உள்ள ஆலய மகா கும்பாபிஷேகத்துக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் புலம்பெயர் நாடொன்றில் இருந்து வந்திருந்த ஐவர் கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்குச்சென்று இறங்குதுறைக்கு அருகில் உள்ள குறித்த மூதாட்டியின் வீட்டில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் அந்த வீட்டில் இருந்து சனிக்கிழமை காலை எவரும் வெளியே வராததால் சந்தேகமடைந்த அயலவர்கள் அங்கு சென்று பார்த்த போது முதியவர்கள் ஐவர் வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டுள்ளனர்.

ஒருவர் வீட்டின் வெளியேயும் ஏனையவர்கள் வீட்டின் உள்ளே படுக்கை மற்றும் ஏனைய பாகங்களிலும் கொடூரமான வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டனர்.

அதில் ஒருவர் படுகாயங்களுடன் காணப்பட்ட நிலையில் அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேலும், வீட்டில் இருந்த அவர்களின் வளர்ப்பு நாய் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் மீட்கப்பட்டுள்ளது. குறித்த நாய் பயத்தினால் வீட்டின் ஒரு மூளையில் சுருண்டு படுத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்த வயோதிபர்கள் ஐவரையும் கொடூரமாகக் கொலைசெய்துவிட்டு தப்பிச் சென்று புங்குடுதீவில் தலைமறைவாகியிருந்த சந்தேக நபரை பொலிஸார் நேற்று கைதுசெய்தனர்.

**பணத்துக்காகவே கொலைசெய்தேன் - சந்தேக நபர் வாக்குமூலம்**

“அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளை கொள்ளையிட்டால் பிடித்துவிடுவார்கள், சம்பவத்தை திசைத் திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்” என்று கைது செய்யப்பட்டவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேக நபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுல செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவில் நடமாடிவிட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்ற நபரை புங்குடுதீவில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயது நபரே கைது செய்யப் பட்டவராவார். அவரிடமிருந்து அதிகளவு தங்கநகைகள் கைப்பற்றப்பட்டன. அதுதொடர்பில் விசாரணை மேற்கொண்டபோதே சந்தேக நபர் தானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டார்.

“நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன்.

அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்லத் திட்டமிட்டேன்.

அதனால் சனிக்கிழமை அதிகாலை 4.30மணிக்கு பின்னர் நித்திரையிலிருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க எண்ணினேன்.

நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள், அதனால் பொலிஸ் விசாரணையை திசைத் திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்” என்று சந்தேக நபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்று ஏனைய சான்றுப்பொருட்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். மேலும், சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைக்காக தடுப்புக்காவல் உத்தரவைப் பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை படுகொலை குற்றச்சாட்டில் கைதான நபரை 48 மணிநேர பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்துறை நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் சந்தேக நபரை முற்படுத்திய பொலிஸார் 48 மணித்தியாலத்திற்கு தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி கோரினர். அதனை ஏற்றுக்கொண்ட மன்று, 48 மணிநேர விசாரணையின் பின் மன்றில் மீண்டும் சந்தேகநபரை முற்படுத்துமாறு பொலிஸாருக்கு பணித்தது.





## ஜனாதிபதியை...

நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற கூட்டத்தொடரில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்படுமென சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டமும் இன்று இடம்பெறவுள்ளது.

## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 318/E கொத்தலேன கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் சுந்தரமூர்த்தி காந்தரூபி அடையாள அட்டை இலக்கம் 967923303 V கொண்ட நான் எனது பெயரை இன்று முதல் சுந்தரமூர்த்தி துஷாந்தனி என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியத்தருகிறேன். ஒப்பம்.

**சுந்தரமூர்த்தி துஷாந்தனி**



வசத் சிரிய - 2023 தமிழ் – சிங்களப் புத்தாண்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு ஷங்ரிலா திடலில் நேற்று நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் அலுவலக பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் வழிநடத்தலில் இந்த புத்தாண்டு நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. அரச பிரிவு, பகிரங்க பிரிவு, விருந்தினர் உள்ளிட்ட மூன்று பிரிவுகளில் பல்வேறு போட்டி நிகழ்வுகளும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளும் அவர்தம் குடும்பத்தினர் சகிதம் நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர். (படங்கள்: லலித் பெரேரா)

# எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பல் மீதான வழக்கை ஒத்திவைக்க இலஞ்சம் பெற்றவர் யார்?

## பெயரை அறிவிக்குமாறு விஜயதாசவுக்கு விமல் பகிரங்கமாக சவால்

இலங்கை கடற்பரப்புக்குள் வெடிப்புக்குள்ளான எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பல் மீது வழக்குத் தாக்கல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை காலந்தாழ்த்துவதற்காக 250 மில்லியன் டொலரை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட நபர் யார் என்பதை நீதி அமைச்சர் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் பாராளுமன்றம் கூடும்போது பாராளுமன்ற சபையிலாவது குறித்த நபரின் பெயரை அறிவிக்க வேண்டும் - என்று தேசிய முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

மேலும், இந்தக் கப்பல் தொடர்பாக நட்டஈட்டு வழக்கு எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதிக்குள் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று (23) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கடற்பரப்புக்குள் வெடிப்புக்குள்ளான எக்ஸ்ப்ரஸ் பேர்ள் என்றழைக்கப்படும் கப்பலின் விவகாரத்தில்,




வழக்குத் தொடராமல் காலந்தாழ்த்திய நபரொருவர் 250 மில்லியன் டொலருக்கும் அதிக தொகையை இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார். அந்தத் தொகை வைப்பிலிடப்பட்ட வங்கிக் கணக்கு இலக்கம் முதல் விசாரணைகளுக்காக பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது பாரதூரமான பிரச்சினையாகும். எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலை அடுத்து நாட்டின் சமுத்திர வலயத்துக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் பாரிய அழிவு ஏற்பட்டிருந்தது. அந்த அழிவின் பாரதூரம் எவ்வளவு என்பதை கணிப்பிட முடியாதளவுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற அழிவு இடம்பெறும் சந்தர்ப்பங்களில் எமது நாட்டிலுள்ள அரசியல்வாதியொருவர், அதிகாரியொருவர் உள்ளிட்ட யாராவது ஒருவர் குறித்த கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்திடம் 250 மில்லியன் ரூபாவோ அல்லது வேறு தொகையோ இலஞ்சமாக பெற்றுக்கொண்டு இந்தப் பிரச்சினையை மூடிமறைக்க முயற்சித்திருக்கிறார்கள் என்றால், இதனூடாக இலங்கை அரசுக்குக் கிடைக்கவேண்டிய நட்டஈட்டை தடுக்க முயற்சிக்கிறார்கள் என்றால் அதனைவிட பாரதூரமான பிரச்சினை இருக்குமென்று நாங்கள் நம்பவில்லை.

அதனால், யார் இந்த இலஞ்சத்தை பெற்றுக் கொண்டார் என்பதை விஜயதாச ராஜபக்ஷ தெளிவாக நாட்டுக்கு அறிவிக்கவேண்டும். பகிரங்கமாக குறிப்பிடுவதானால் பாராளுமன்றம் கூடுகிறது. அதன்போது, பாராளுமன்ற சபைக்குள்ளாவது எங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இலஞ்சம் பெற்றவரின் பெயரை குறிப்பிடாமல், அதனை மூடி மறைத்துக்கொண்டு வங்கிக் கணக்கு இலக்கமும் தெரியும். அதனையும் நானே கொடுத்தேன் என்று கூறுவதில் எந்தப் பயனும் இல்லை.

இந்த அழிப்பு தொடர்பில் நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசுக்கு இருக்கும் உரிமை தொடர்பில் தவிர்த்துக்கொள்வதற்காக இந்த இலஞ்ச தொகையை பெற்றுக்கொண்டவர் யார் என்பதை பாராளுமன்றத்துக்குள்ளாவது அறிவிக்க வேண்டும்.

2021ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியே இந்தக் கப்பல் விபத்துக்குள்ளானது. அவ்வாறெனில் 2023ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். தற்போதையளவில் உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறோம். ஆனால், நட்டஈட்டுக்கான வழக்கை இதுவரையில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறெனில், எமக்கு இன்னும் குறுகிய காலமே இருக்கிறது. இந்தக் குறுகிய காலத்தில் நட்டஈட்டுக்கான வழக்கைத் தாக்கல் செய்யவிட்டால், குறித்த நபர் பெற்றுக்கொண்ட இலஞ்சத்தை விட பாரதூரமான குற்றமாகும்.

எனவே, இதுதொடர்பில் பரந்துபட்ட விசாரணையும் அவசியமாகும். நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான வழக்குத் தாக்கலை செய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் அதுதொடர்பிலான சட்ட நடவடிக்கை எடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை**

- **மேஷம்**: காலையில் இருந்த குழப்ப நிலை மாலையில் இருக்காது. எப்படியாவது இன்று உங்கள் காரியங்களை சாதித்துவிடுவீர்கள்.
- **ரிஷபம்**: உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம் உண்டு. காரியத்தடைகளை எப்படியாவது சமாளித்துவிடுவீர்கள்.
- **மிதுனம்**: நண்பர்களின் சந்திப்பால் அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். சுப காரிய நிமித்தம் சிற்சில செலவுகளை செய்யவேண்டிய கட்டாயம்.
- **கடகம்**: தொழில், வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பாராத பயணங்களால் விரயங்கள் உண்டு.
- **சிம்மம்**: புதிய தொழில் முயற்சிகளால் அதிக லாபங்களை அடைவீர்கள், எதிர்பாராத தன அதிர்ஷ்டங்கள் உண்டு.
- **கன்னி**: தடைப்பட்டிருந்த பயணங்கள் இன்று நல்லபடியாகக் கைகொடுக்கும். தொழில் வகையில் அதிக பாராட்டுகளைப் பெறும் நாள்.
- **துலாம்**: திட்டமிட்டு எதையும் இன்று ஆரம்பிக்காதீர்கள். கோபத்தால் புத்தி தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.
- **விருச்சகம்**: கூட்டுறவால் நன்மைகளும் லாபங்களும் உள்ளன. என்றாலும் மாலையில் அதிக மனச்சோர்வுடன் காணப்படுவீர்கள்.
- **தனுசு**: ஏதாவது உடல் நோயால் தொந்தரவுகள் ஏற்படலாம். அல்லது மறைமுக எதிரிகளின் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள்.
- **மகரம்**: திடீர் அதிர்ஷ்டம் மற்றும் போட்டி லாபங்களால் மன நிறைவு கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைக்காக கடன் வாங்குவீர்கள்
- **கும்பம்**: உறவினர் நண்பர்களின் பூரண ஆதரவோடு காரியங்களைச் சாதிப்பீர்கள். வீட்டுக்கான செலவுகள் உண்டு.
- **மீனம்**: குடும்பத்தின் மகிழ்ச்சியே முக்கியம் எனக் கருதி அதற்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள். தைரியமாக செயற்படுவீர்கள்.

| | |
|---|---|
| திதி | : சதுர்த்தி மு.ப.8.25 வரை பின் பஞ்சமி |
| நட்சத்திரம் | : மிருகசீரிடம் பி.இ.2.07 வரை பின் திருவாதிரை |
| யோகம் | : அமிர்த சித்த யோகம் |
| வார சூலம் | : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : பி.ப. 11.56 – 12.56 மணி வரை |
| ராகு காலம் | : 7.26 – 8.56 மணி வரை |
| எமகண்டம் | : 10.26–11.56 மணி வரை |
| குளிகை | : 1.26 – 2.56 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : துலா-விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிர்ஷ்டம் | : ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு) |
| விஷேட தினம் | : -------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் மே 15ஆம் திகதிக்குள் விநியோகம்

மே மாதம் 15ஆம் திகதிக்குள் பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் விநியோகிக்கப்படுமென்று கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதுவரை 80% பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பாடப்புத்தகங்கள் அனைத்தையும் மே மாதம் 15ஆம் திகதிக்குள் விநியோகிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன், தற்போது 85% சீருடைகள் விநியோகிக்கப்பட்டுள்ள அதேவேளை, மீதமுள்ள சீருடைகளை மே மாதம் 15ஆம் திகதிக்குள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான புதிய சட்டமூலம்


## தனியார் பிரேரணையாக பாராளுமன்றத்தில்

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலமொன்றை நாளை (25) தனியார் பிரேரணையாக பாராளுமன்றத்தில் முன்வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தீர்மானித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் தனிநபர் யோசனையாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அதற்கமைய குறித்த யோசனை தொடர்பான முதலாவது வாசிப்பு நாளை (25) முன்னெடுக்கப்படவுள்ளதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார். அந்த சட்டமூலத்துக்கு பாராளுமன்றத்தில் அனுமதி கிடைத்தால் இதற்கு முன்னிருந்த தேர்தல் முறைக்கமைய மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியுமென அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# கத்திக்குத்து தாக்குதலில் மிரிஹானயில் ஒருவர் உயிரிழப்பு



மிரிஹான, கல்வல வீதி பகுதியில் நேற்று (23) அதிகாலை உறவினர்களுக்கிடையிலான கத்திக்குத்து தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இருவரும் களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும், அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


தாக்குதலில் காயமடைந்த 53 வயதுடைய நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் தெனியாய பொரலுவாய பிரதேசத்தில் வசிப்பவர் என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் மிரிஹான கல்வல வீதியில் வசித்துவந்த 34 வயதுடைய சஜித் மதுசங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை மிரிஹான பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# குடிநீர் விநியோகம் தடைப்படும் அபாயம்



நாட்டில் ஏற்பட்டுள்ள அதிக வரட்சியான காலநிலை காரணமாக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதேநிலை நீடித்தால், குடிநீர் விநியோகம் தடைப்படும் அபாயம் உள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

## தினசரி மின் தேவையும் அதிகரிப்பு

இதேவேளை, நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக மின்சார தேவையும் அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தினசரி மின் தேவை நேற்று முன்தினம் (22) 45 கிகாவோட்டாக அதிகரித்துள்ளது.

மாலை ஏழு மணியளவில் அதிகபட்சமாக 2,097 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் தம்மிக்க என்.நவரத்ன தெரிவித்தார்.



புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு கொழும்பு 02, வேக்கந்த ஜும்மா பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் விசேட தொழுகை இடம்பெற்றது. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஏப்ரல் 24ஆம் திகதி, திங்கட்கிழமை**

# சூழல் பேரனர்த்தத்தை வைத்தும் உழைப்பா?

2021ஆம் ஆண்டு 'எக்ஸ்பிரஸ் பேர்ல்' (Xpress Pearl) கப்பல் அனர்த்தம் தொடர்பில் இழப்பீடு கோரி சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் இலங்கை இன்று (24.04.2023) சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வழக்கை இலங்கையில் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை உள்ள போதிலும், வழக்கின் பிரதிவாதிகள், கப்பலின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், நடத்துநர் மற்றும் மேலாளர்கள் உட்பட வணிக ஸ்தலம் சிங்கப்பூராக இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பேரழிவு தொடர்பான உரிமைகோரல் நடவடிக்கையை நிறுவுவதற்கு சிங்கப்பூர் பொருத்தமான இடமாக இருக்கும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. கப்பலில் இருந்து வெளியேற்றப்படும் பிளாஸ்ரிக் துகள்களால் இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழலுக்கு நீண்டகாலமாக ஏற்படும் சேதத்தின் முழு அளவு மற்றும் ஈர்ப்புத்தன்மை குறித்த இந்த நடவடிக்கை சர்வதேச கவனத்தை ஈர்க்கும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டு மே 20ஆம் திகதியன்று 1488 கொள்கலன்களுடன் சிங்கப்பூர் கொடியிடப்பட்ட கொள்கலன் கப்பல் தீப்பிடித்தது. 25 தொன் நைட்ரிக் அமிலம், 348 தொன் எண்ணெய் மற்றும் 75 பில்லியன் சிறிய பிளாஸ்ரிக் துகள்கள் உட்பட ஆபத்தான பொருட்களுடன் மொத்தம் 81 கொள்கலன்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பை அண்மித்த கடற்பரப்பில் இரு தடவைகள் நங்கூரமிடப்பட்ட 'எக்ஸ்பிரஸ் பேர்ல்' கப்பலில் இருந்து மஞ்சள் நிறத்தில் புகை வெளியேறுவதாக 2021.05.20ஆம் திகதி மாலை 4 மணியளவில் கடல்வள பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. 2021.05.21ஆம் திகதி காலை உரிய அதிகாரிகள் கப்பலுக்கு அருகில் சென்றனர்.

''நாட்டின் கடல் வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம். விரைவாக கடல் எல்லையை விட்டு செல்லுங்கள்'' என 2021.05.21ஆம் திகதி பகல் வேளையில் கப்பலின் கப்டன், கப்பல் நிறுவனம் உட்பட நான்கு பிரதான தரப்பினருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. தீயணைப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கப்பல் நிறுவனம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பும் இலங்கையினால் வழங்கப்பட்டது.

இதனையடுத்து தீப்பரவல் 2021.05.24ஆம் திகதி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 2021.05.25ஆம் திகதி கப்பலில் மீண்டும் தீ பரவ ஆரம்பித்து. பாரிய வெடிப்புகள் ஏற்பட்டன. கடல் எல்லையை விட்டுச் செல்லுமாறு பலமுறை வழங்கிய அறிவுறுத்தலை கப்பலின் உரிய தரப்பினர் கவனத்தில் கொள்ளவில்லை. கப்பல் முழுமையாக தீக்கிரையாகி ஜூன் மாதமளவில் கடலில் முழுமையாக மூழ்கியது.

இந்தக் கப்பலில் 380 மெட்ரிக் தொன் எண்ணெய் கடல் நீரில் கலக்காமல் இருப்பதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. கப்பலில் சேமிக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பீப்பாய்கள் நாடு முழுவதிலும் உள்ள பெரும்பாலான கடற்கரைகளில் கரையொதுங்கின. பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் கடல் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்தனர்.

கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் உரிய தரப்பினருக்கு முறைப்பாடு செய்து, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் உரிய ஆவணங்களை அதிகாரிகள் சமர்ப்பித்தபோதிலும், ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கவில்லை. விபத்தினால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கு 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு பின்னர் நியமிக்கப்பட்டது.

சிவில் வழக்குக்கு அமைய நட்டஈடு பெற்றுக் கொள்வதற்கு சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்வது குறித்து ஆரம்பத்தில் அவதானம் செலுத்தவில்லை. இலங்கையின் சட்டக் கட்டமைப்புக்குள் வழக்குத் தாக்கல் செய்து நட்டஈடு பெற்றுக்கொள்ளவே எதிர்பார்க்கப்பட்டது. கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னரே சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

'எக்ஸ்பிரஸ் பேர்ல்' கப்பல் விவகாரத்தில் கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபைக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டன. பிளாஸ்ரிக் பீப்பாய்ளை அகற்றுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்கான செலவுகளை டொலரில் வழங்க கப்பலின் காப்புறுதி நிறுவனம் ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்து, இரு தவணைகளை டொலரில் செலுத்தியது.

மூன்றாவது தவணையை ரூபாவில் செலுத்துவதாக சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக அறிவித்தது. இதனையடுத்து நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தற்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியிலேயே, 'எக்ஸ்பிரஸ் பேர்ல்' கப்பல் உடனான நட்டஈட்டுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பினருக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்தப் பணத்தை பிரித்தானிய வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை விசாரிக்க பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் கோரியுள்ளதாகவும் 'எக்ஸ்பிரஸ் பேர்ல்' கப்பலால் கடற்பரப்பில் ஏற்பட்ட சேதத்திற்கு எதிராக வெளிநாடு ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறியுள்ள நீதி அமைச்சு, அதற்காக 2 வெளிநாட்டு சட்ட நிறுவனங்களை தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இந்தளவு தூரம் இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்திய இந்த விவகாரத்தில் அரசின் மெத்தப்போக்கும், இதை வைத்து இலஞ்சம் பெற்ற மோசமான நடவடிக்கையும் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாட்டுக்கு, மக்களுக்கு, சூழலுக்கு, உயிர்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. கிடைக்கும்வரை கொள்ளையடிக்கலாம் என்ற மனப்பான்மை, அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இருப்பதையே இது உணர்த்துகிறது.

இப்பேர்ப்பட்ட சூழல் பாதிப்பிற்கான நட்ட ஈடு கூட அந்த பாதிப்பை சீர் செய்யாது என்ற நிலையில், அதனை வைத்து இலஞ்சம் பெற முயற்சித்தோரை இலகுவில் விட்டுவிடுவதா? 'எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ல்' கப்பல் நிறுவனத்திடமிருந்து நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்வதை தடுப்பதற்கு 8,000 கோடி ரூபா இலஞ்சம் பெற்ற இலங்கையர் யார் என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டுமென பொதுஜன பெரமுனவின் சுயாதீன எதிரணி நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார். இதுவே மக்களின் எதிர்பார்ப்பும் கூட.



# உடப்பூரில் சித்திரைச்செவ்வாய் முளைக்கொட்டு

புத்தளம் மாவட்டத்தில் பரந்துவாழும் மக்களில் தமிழ் மக்களும் ஒரு குடியினராவர். அந்த வகையில் தமிழ் மக்கள் கூட்டாக செறிந்து வாழும் தமிழ்க் கிராமம் உடப்பூராகும். இந்தக் கிராமத்தில் ஜீவனோபாய தொழிலாக கடற்றொழில் இருந்தாலும் இவர்கள் தமது கலை, கலாசாரத்தை கண்ணியமாக மதித்து வந்ததை இன்றும் பல கலை நிகழ்ச்சிகளின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் உடப்புக் கிராமத்தில் 'சித்திரைச்செவ்வாய் முளைக்கொட்டு' வம்சாவளியாக தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்ச்சி 2023.04.16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முளைப்பதித்தல் மூலம் ஆரம்பமாகியது. இந்நிகழ்வின் இறுதி நிகழ்ச்சி 2023.04.26ஆம் திகதி புதன்கிழமை காலை வேளையில் இடம்பெறும். உடப்பில் மாரியம்மன் வழிபாட்டின் மற்றொரு அம்சமாகச் சித்திரை மாதத்தில் திறந்தவெளி வீடுகளின் வளவுகளில் நடத்தப்படும் சித்திரைச்செவ்வாய் விழாவைக் குறிப்பிடலாம்.

அக்கினி நட்சத்திரம் என மக்கள் குமுறுகின்ற காலம் இது. அக்கினி நட்சத்திரம் என்பது சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் இருந்து விசாக நட்சத்திரம் வரை 21 நாட்களைக் குறிக்கும். இக்காலப்பகுதி மிகவும் வெப்பமானது. இந்தக் காலத்திலேயே தமிழ்நாட்டில் மாரியம்மன் கோவில்களில் விழாக்கள் இடம்பெறும். மழை வரவிருப்பதையே இவ்வழிபாடு உணர்த்தும். அங்கு கோயில் திருவிழா தொடங்கிவிட்டதை அறிவிக்க கொடி ஏற்றப்படும். அன்று முளைப்பாரி கொட்டுதல் என்றொரு நிகழ்ச்சி உண்டு. கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒரு குடத்தில் நெல் தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றை விதைப்பார்கள். எட்டாம் நாள் அந்தக் குடங்களை கோயிலுக்குக் கொண்டு வருவார்கள். அந்த மூன்று நாட்களும் பெண்கள் பலர் சேர்ந்து மாரியம்மன் புகழைக் கும்மியடித்துப் பாடுவார்கள். பிறகு வணக்க ஒடுக்கமாக பானைகளை வலம் வருவர். திருவிழாவின் இறுதியில் அருகேயுள்ள குளம் அல்லது ஆற்றில் பானைகளை மூழ்கடித்துவிடுவர்.

இந்தக் கூற்றுகளிலிருந்து தமிழ்நாட்டு வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு கூறு சிற்சில மாறுதல்களுடன் சித்திரைச்செவ்வாய் விழாவாகப் பின்பற்றப்பட்டு வருவது புலப்படுகின்றது. இச்சடங்கு நிகழ்ச்சி வழிபாடு தொடர்பானதாக இருக்கின்றமையால் அவ்வேளையில் பாடப்படும் பாடல்களும் வழிபாடு தொடர்புடையனவாக அமைகின்றன. இச்சடங்கின்போது கும்மி ஆட்டத்துடன் பாடலும் இடம்பெறுகின்றது. இச்சடங்கு நிகழ்ச்சியின் போது நவதானியங்கள் முளைக்க வைத்தல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது. முளைக்க வைக்கத் தேவையான நவதானியங்களை வீடு வீடாகச் சென்று பெற்றுக்கொண்டனர். அவ்வாறு நவதானியங்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய பாடலைப் பாடினர்.





கன்னிப்பெண்கள் வீடுவீடாகச் செல்லும்போது இவ்வாறு பாடுவர்.

''கடலை சிறு பயறு கானாமணிப் பயறு தங்கமுத்து நாச்சியார்க்கு எங்கும் சிறு பயறு" மாரியம்மனுக்காக கொண்டாடப்படும் இச்சடங்கில் நவதானியங்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படும். குறிப்பிட்ட பத்து தினங்களில் நவதானியங்கள் நன்கு வளர்ச்சியடைந்திருப்பின் அம்மன் அருள் பாலித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. நவதானியங்களுக்காக கடலை, பயறு, எள்ளு, கொள்ளு, நெல், குரக்கன், தினை போன்றவற்றை தெரிவு செய்வர். நவதானியங்களை பாலிகைச்சட்டியில் உரமிட்டு சாணம் நிரப்பிப் பதித்து, தூப தீபம் காட்டி, காலையும் மாலையும் நீர் ஊற்றுவார்கள். இவற்றுக்கு பத்து வயதுக்குட்பட்ட கன்னிப்பெண்கள் நீரூற்றி பக்குவமாக வளர்ப்பார்கள். இறுதி நாளுக்கு முந்திய செவ்வாய்க்கிழமை இரவு மாரியம்மனுக்கு வேப்பிலைக் கும்பம் வைத்து, அதற்குரிய பலகாரம், கனிகள் வைத்து அன்றிரவு தொடங்கி விடியும் வரை ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் கும்மிகொட்டிக் கொண்டாடுவார்கள். இதனை செவ்வாய்க் கொட்டுதல் என்று அழைப்பார்கள்.

இறுதி நாள் புதன்கிழமை காலை கொழுக்கட்டை, கனி, பொங்கல் ஆகியவற்றைப் படையல் செய்து பூஜை வைத்து வழிபடுவார்கள். அத்துடன் தேர் வடிவத்தில் அழகான பெட்டி செய்து, பலவர்ண நிற ஓலைகளால் அலங்கரித்து, அதற்குள் செவ்வாய் என்னும் பலகாரம் வைத்து, அத்துடன் சோறு, பொரியல் வைத்து படையல் வைப்பார்கள். செவ்வாய்க்கிழமை இரவு வைத்த இந்தப் படையல்களை புதன்கிழமை காலையில் எடுத்து வீடுகளுக்குக் கொண்டுபோய் உண்பார்கள். செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் சித்திரைச்செவ்வாய் கொட்டும்போது ''ஓராம் நாள் முளை எழுந்து ஓங்கி வளருமாம் மாரி முளை ஈராம் நாள் முளை எழுந்து இரட்டனம் கொட்டுமாம் மாரிமுளை'' என்று தொடங்கும் பாடலானது குறிப்பிட்ட பத்து நாட்களுக்குள்ளும் முளைக்க வைத்த நவதானியங்களின் வளர்ச்சி பற்றி கூறுவதாக அமைகின்றது.

சித்திரை மாதம் என்பது வெப்பம் நிறைந்த காலப்பகுதியாகும். இக்கால கட்டத்தில் அம்மை நோய் கூடுதலாக வருவதுண்டு. இந்நோயை இல்லாது செய்வதற்கு மாரியம்மனுக்கு செய்யும் ஒரு நேர்த்தியாகவும் இதை உடப்புக்கிராம மக்கள் கருதுகின்றனர் எனலாம். இந்நிகழ்வானது இக்காலகட்டத்தில் பெண்கள் ஓரே நிறச்சேலைகளை அணிந்து, வரிசையாக வலம் வந்து இரு கைகளாலும் ஓசை உண்டாக்க செவ்வாய் கொட்டுவார்கள். இந்தக் கண்கொள்ளாக் காட்சி எமது கிராமத்தில் மட்டும் பார்ப்பவரை மிகவும் கவரும் வண்ணம் நடைபெறுகின்றது எனலாம். இந்தச் சித்திரைச்செவ்வாய் சடங்கு நிகழ்ச்சி இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் இருப்பதாக அறிய முடியவில்லை. ஆனால், இதனுடன் தொடர்புடையதாக இந்தியாவில் இராமநாதபுர மாவட்டத்தில் நடைபெறும் முளைப்பாரி சடங்கு நிகழ்ச்சி காணப்படுவதாக அறிய முடிகின்றது.

**கலைச்சுடர் க.மகாதேவன் (உடப்பூர்)**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1955 – இந்தோனேசியாவின் பண்டுங் நகரில் ஆசியா மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. இதன்போது குடியேற்றவாதம், இனவாதம் மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1964 – இலங்கையில் 'சிங்களம் மட்டும்' சட்டத்திற்கெதிராக செல்லையா கோடீஸ்வரன் என்பவர் தொடுத்த வழக்கில் இச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானது என மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 1967 – சோயூஸ்-1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமிர் கொமரோவ், அவரது வான்குடை திறக்கமுடியாமையினால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதல் வீரர்.
- 1990 – டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 1993 – இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சியம் அமைக்கப்பட்டது.
- 2007 – பலாலி இராணுவத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

# நாடு பொருளாதாரத்தில் பின்னடைவைச் சந்தித்தபோது இந்தியா எமக்கு உதவியதை நாம் மறந்துவிட முடியாது

## பிரதமர் தினேஷ் குணவர்தன நுவரெலியாவில் தெரிவிப்பு

(நுவரெலியா நிருபர்)

இலங்கை பொருளாதார ரீதியாக பின்னடைவைச் சந்தித்திருந்தபோது எமக்கு உதவி செய்தது இந்தியா என்பதை நாம் மறந்துவிட முடியாது. எனவே, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் நெருக்கமாதோர் உறவு இருக்கின்றது என்பதை யாராலும் மறந்துவிட முடியாது. இன்றைய இந்த நிகழ்வானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது - என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் புனித நீர்த் தடாக திறப்பும் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டலும் முத்திரை வெளியீடும் நேற்று (23) இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

இன்று சீதையம்மன் ஆலயத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள தியான மண்டபத்திற்கும் இந்திய மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அதற்குக் காரணம்,



அதற்கான நிதியை வழங்குகின்றவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.

இது ஒருபுறம் இருக்க, எங்களுடைய நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இருக்கின்ற கலை, கலாசார ரீதியான ஒற்றுமையை எடுத்துக்காட்டுவதாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. எங்களுடைய இரு நாட்டுக்கான உறவு பல தசாப்தங்களைக் கடந்து செல்கின்றது.

இந்தியாவில் இமயமலையின் பல பகுதிகளிலும் தியான மண்டபங்களும் அதற்கான சூழலும் அமைந்திருக்கின்றன. அதேபோல் இன்று இலங்கையின் உயரமான மலையான பீதுருதாலகால மலையின் அடிவாரத்தில் சீதையம்மன் ஆலயத்தில் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்படுகின்றது.

இலங்கை நாடானது இன்று முன்னோக்கிச் செல்கிறதென்றால் அதற்கு இந்தியா எங்களுக்கு செய்த உதவிகள் முக்கிய காரணமாக அமைந்துள்ளன. எங்களுடைய நாடு எதிர்நோக்கிய பொருளாதாரப் பின்னடைவின் போது இந்தியாவின் உதவியானது நாம் மீண்டும் எழுந்து முன்னோக்கி நடப்பதற்கான அடித்தளத்தை வகுத்துள்ளது.

மதங்களுக்கு இடையிலான நெருங்கிய புரிந்துணர்வும் எமது பொருளாதார பின்னடைவின்போது எமக்கு பல உதவிகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தது.

புத்தரின் போதனைகள் எம்மை நல்வழிப்படுத்துவதற்கு ஒரு தலமாக அமைந்திருக்கின்றது. அதனை நாம் அனைவரும் பின்பற்றி நடக்கவேண்டும். இன்று நாம் அனைத்து மதங்களுக்கும் அவர்களுக்கான முக்கியத்துவத்தை கொடுத்து வருகின்றோம் - என்றார்.

# ஆசியாவிலேயே அதிக நீரிழிவு நோயாளர்களைக்கொண்ட நாடாக இலங்கை

ஆசியாவிலேயே அதிக நீரிழிவு நோயாளிகளைக் கொண்ட நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சுகாதார கொள்கை நிறுவனம் மற்றும் ரஜரட்ட ருஹுனு, கொழும்பு பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.




இந்த நாட்டிலுள்ள நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு, அதாவது 23 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில், அந்த எண்ணிக்கை 31 சதவீதமாக அதிகரித்துள்ளது, அதாவது மூன்று பெரியவர்களில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# புகையிரதத் திணைக்களத்தை அதிகாரசபையாக்க வேண்டும்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



திணைக்களமாக அபிவிருத்தி அடைந்துவரும் வரையறைகளை தவிர்த்துக்கொள்வதற்காக, புகையிரதத் திணைக்களத்தை அதிகாரசபையாக உருவாக்க வேண்டும் - என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எல்ல புகையிரத நிலையத்துக்கு வருகைதரும் தேசிய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்ட புகையிரதப் பயணிகளின் வசதிகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய ஆலோசனை அலுவலகம், பொதி அறை உள்ளிட்ட புதிய வசதிகளை திறந்துவைக்கும் நிகழ்வு அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எல்ல புகையிரத நிலையத்துக்கு வருகை தரும் தேசிய, சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தப் பிரதேசத்தை அண்மித்த பிரதேசங்களில் சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் அவர்களின் மேலதிக பொருட்களைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கான வசதி உள்ளிட்ட பல்வேறு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு இதனூடாக முடிகிறது.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஆதரிக்கும் எல்ல புகையிரத நிலையம் இலங்கையின் புகையிரத சேவைக்கு பல்வேறு பங்களிப்பைச் செய்கிறது. அதன்போது புகையிரத நிலையத்துக்கு வரும் தேசிய மற்றும் சர்வதேச பயணிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக திறந்துவைக்கப்பட்டுள்ள இந்தச் சேவைகள் இங்கு புகையிரதத்தில் வரும் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாடு என்ற அடிப்படையில் அபிவிருத்திக்காக புதிய வருமான விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தும் சந்தர்ப்பத்தில், நிறுவனம் என்ற அடிப்படையில் புகையிரதத் திணைக்கள முறைமையால் மந்தபோக்கு நிலையே காணப்படுகிறது. அதனால் நாட்டின் அபிவிருத்திக்கு இன்னும் பாதிப்பு ஏற்படும். அதன் காரணமாக நிறுவனமாக மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை பெற்றுக்கொடுக்கவும் வருமானத்தைப் பெறும் நிறுவனமாக செயற்படுவதற்காகவும் புகையிரதத் திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றிக்கொள்ளவேண்டும் - என்றார்.

# தேசிய கண் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைகள் இன்றுமுதல் வழமைக்கு

தேசிய கண் வைத்தியசாலையில் இன்று (24) முதல் சத்திரசிகிச்சைகள் வழமைபோன்று இடம்பெறுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சத்திரசிகிச்சையின் பின்னர் பல நோயாளிகளுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக, அண்மையில் தேசிய கண் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகளை இடைநிறுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட 'பிரெட்னிசோலோன்' என்ற கண் சொட்டு மருந்தின் பயன்பாடு, இந்த சிக்கல்களை ஏற்படுத்தியதாக கண்டறியப்பட்டது. இதன்மூலம், சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய, பிரெட்னிசோலோன் (Prednisolone) பாவனை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விலக்கிக்கொள்ளப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் விசேட விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்றுமுதல் வழமைபோன்று கண் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்

# அதிவேக வீதிகளில் இயங்கும் பஸ்களுக்கு வீதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் மோசடி

அதிவேக நெடுஞ்சாலைகளில் இயங்கும் பஸ்களுக்கு புதிய வீதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் பாரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாக விலைமனுக் கோராமல் 35 பஸ்களுக்கு தற்காலிக வீதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அரசாங்கத்திற்கு மில்லியன் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களின் ஆதரவிலேயே இந்த வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் விஜேரத்ன குற்றஞ்சுமத்தியுள்ளார்.

# உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஆசிரியர்கள் இன்றுமுதல் பங்கேற்பு


க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் அனைத்து ஆசிரியர்களும் பங்கேற்பார்களென அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வண. யல்வெல பன்னசேகர தேரர் தெரிவித்துள்ளார்.

2022 க.பொ.த. உயர்தரத்திற்கான பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் இன்று (24) முதல் பங்கேற்பார்கள்.

ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் கல்வி அமைச்சு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பன்னசேகர தேரர் தெரிவித்தார்.

அதன்படி, விடைத்தாள்களின் மதிப்பீட்டை நிறைவுசெய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது முக்கியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# செல்பி எடுக்கச்சென்ற சிறுவன் ரயிலிலிருந்து தவறி விழுந்து விபத்து



(பதுளை நிருபர்)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற புகையிரதத்திலிருந்து தவறி விழுந்து 15 வயதுடைய சிறுவன் தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் நேற்று (23) சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புகையிரதம் செல்லும்போது செல்பி எடுக்கச்சென்ற சிறுவன், ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன ஆகிய பகுதிகளுக்கு இடையில் ரயிலிலிருந்து தவறி விழுந்ததாக புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்த சிறுவனை அதே ரயிலில் ஹப்புத்தளை புகையிரத நிலையத்திற்கு அழைத்துச்சென்று 1990 சுவசெரிய அம்பியூலன்ஸில் தியத்தலாவ ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்று சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தினக் கூட்டம் ஹட்டனில்

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தினக் கூட்டத்தை ஹட்டனில் நடத்த திட்டமிட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றிலேயே நூறு ஆண்டுகள் நிறைவு செய்துள்ள முதலாவது தொழிற்சங்கமாக எமது சங்கம் திகழ்கிறது. அதனை நினைவுகூரும் முகமாக எதிர்வரும் முதலாம் திகதி ஹட்டன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் மே தின விழா நடத்தப்படும்.

காலை 9.00 மணிக்கு ஹட்டன் புகையிரத சந்தியில் அணிவகுப்பு ஆரம்பித்து மண்டபத்தை நோக்கி சென்றபின் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இதில் சங்கத்தின் தலைவர் நிசாந்த வன்னியாராச்சி, பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சிஸ், நிதிச் செயலாளர் மாரிமுத்து சுதாகர் உட்பட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் உரையாற்றவுள்ளனர்.

# முப்பது வருடங்களாக குடிநீரின்றி வாடும் திஸ்ஸமஹாராம கிரிந்த ஹாஜியார் கிராம மக்கள்



திஸ்ஸமஹாராம கிரிந்த ஹாஜியார் கிராமத்தில் சுமார் 120 குடும்பங்கள் குடிநீரின்றி தவிப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஹாஜியார் கிராமத்திற்கு ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் குடிநீர் கிடைத்ததாகவும் தற்போது சுமார் 30 ஆண்டுகளாக இந்தக் கிராமத்திற்கு தண்ணீர் வரவில்லை என்றும் ஹாஜியார் கிராம மக்கள் தண்ணீரின்றி தவித்து வருவதாகவும் கூறுகின்றனர்.

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் நாம் பல தடவைகள் முறையிட்டபோதும், அதற்கு உரிய தீர்வெதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இப்போது இந்தக் கிராமத்தில் இருக்க முடியாது, வீடுகளை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஹாஜியார் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமீபத்திய நாட்களில் இந்தக் கிராமத்தின் பெரும்பாலான மக்கள் நோன்பை கடைப்பிடித்தனர். அந்த நாட்களில் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல்போன நிலையிலும் கூட நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் அவர்களுக்கு குடிநீரை வழங்கமுடியவில்லை.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பல முக்கிய அரசியல்வாதிகள் இருப்பினும்கூட எங்களுக்கு இந்தப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிட்டவில்லை. எங்கள் கிராமத்தை சுற்றி நீர் ஆதாரங்கள் உள்ளன. கிரிந்தி ஓயா, யோத வாவி என்பன உள்ளன.

இவ்வாறான வளங்கள் இருந்தும் கூட எங்களுக்கு குடிநீரைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் இங்குள்ள ஆட்சியாளர்கள் தோல்வியடைந்துவிட்டதாக ஹாஜியார் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# நூரளை சீதையம்மன் ஆலயத்தில் புனித நீர்த் தடாகம் திறப்புவிழா





(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் புனித நீர்த் தடாக திறப்பும் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டலும் முத்திரை வெளியீடும் நிகழ்வும் நேற்று (23) இடம்பெற்றது.



இந்நிகழ்வானது ஆலய அறங்காவலர் சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றதுடன், நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தனவும் சிறப்பு அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.பி.ரட்னாயக்க யதாமினி குணவர்தன, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, உதவித் தூதுவர் டாக்டர் திருமதி எஸ்.அதிரா ஆகியோரும் நுவரெலியா டில்லி ரோட்டறி கழக உறுப்பினர்களும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களும் பக்த அடியார்களும் கலந்துகொண்டனர்.

தியான மண்டபத்திற்கான அனுசரணையை டில்லியைச் சேர்ந்த பிரதீப் ஜெய்ன் குடும்பத்தினர் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வெள்ளிக்கிழமை 2023.04.21
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| சீட்டு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5093 | ரூ. 10,929,024.00 | V | 1 8 1 5 0 4 |
| கொவிசெத | 3335 | ரூ. 97,717,449.44 | O | 14 48 65 71 |
| ஜாதிக சம்பத | 1548 | ரூ. 12,432,666.80 | தனுசு | 0 8 4 3 7 4 |
| தன நிதானய | 1123 | ரூ. 87,013,081.60 | B | 02 14 32 34 |
| ராசி சுப பலன் (Handahana) | 402 | ரூ. 2,553,656.20 | மகரம் (விசேட இலக்கினம்: மகரம்) | 24 41 48 58 |
| மெகா பவர் | 1441 | ரூ. 315,992,582.00 (அடுத்த மெகா சுப்பர் பரிசு) | Q (சுப்பர் இலக்கம் 21) | 04 06 46 58 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

சனிக்கிழமை 2023.04.22
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| சீட்டு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5094 | ரூ. 11,818,152.00 | R | 6 7 7 2 4 6 |
| கொவிசெத | 3336 | ரூ. 97,861,476.24 | G | 02 16 43 68 |
| ஜாதிக சம்பத | 1549 | ரூ. 12,432,666.80 | துலாம் | 2 9 5 0 6 9 |
| தன நிதானய | 1124 | ரூ. 87,214,192.00 | U | 06 23 30 77 |
| ராசி சுப பலன் (Handahana) | 403 | ரூ. 2,657,328.40 | சிம்மம் (விசேட இலக்கினம்: சிம்மம்) | 30 35 56 59 |
| மெகா பவர் | 1442 | ரூ. 316,284,578.00 (அடுத்த மெகா சுப்பர் பரிசு) | Y (சுப்பர் இலக்கம் 22) | 17 22 31 74 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மீதான விமர்சனங்களில் கவனம் செலுத்தவேண்டும்

## தேவையேற்பட்டால் எதிர்த்தரப்பினருடன் பேச்சு நடத்துமாறும் அமைச்சர் விஜயதாசவிடம் அஸ்கிரிய பீடத்தினர் வலியுறுத்து

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் நிலவும் விமர்சனங்கள் குறித்து கவனம் செலுத்துமாறும், தேவையேற்பட்டால் எதிர்த்தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கத் தேரர் தம்மதஸ்ஸி தேரர் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாட்டை நேசிப்பவர் என்ற அடிப்படையில், கடமைக்காக நீங்கள் எதனையும் செயற்படுத்த வில்லை. உங்களைப் போன்றவர்கள் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் நன்மை, தீமைகள் குறித்து சிந்தித்திருப்பீர்கள்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் உள்ளிட்ட எதிர்காலத்தில் கொண்டுவர எதிர்பார்த்துள்ள சட்டமூலங்கள் தொடர்பில் மகாசங்கத்தின் அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த வரக்காகொட தம்மதஸ்ஸி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரை தெளிவுபடுத்துவதற்கான முக்கிய

அரசாங்கத்தின் தேவை தொடர்பில் சிந்தித்து, பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு இடமளிக்க ஒருபோதும் முடியாது. அதற்காக தயாரிக்கப்படும் சட்டங்களை அவ்வாறே தயாரிக்கவேண்டும். இதற்கு மேலதிகமாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்ற சம்பவங்கள் எமது நாட்டில் இடம்பெற்றன.





சட்டமூலமொன்றை தயாரிக்கும்போது எதிர்காலம் தொடர்பில் நன்கு சிந்தித்துச் செயற்பட்டிருப்பீர்கள் என்று நம்புகின்றோம் - என மகாசங்கத்தினர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர்.

சந்திப்பொன்று, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதன்போது கருத்து தெரிவித்த அஸ்கிரிய விகாரையின் அனுநாயக்க ஆணதடுவே தம்மதஸ்ஸி தேரர்,

பயங்கரவாதச் சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, தற்போதுள்ள பிரச்சினைகளை சீர்செய்துகொண்டு தேவையேற்பட்டால் எதிர்த்தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால், நாட்டில் முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுகளை எதிர்க்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறது. அது இந்த நாட்டின் தன்மை. அரசால் கொண்டுவரப்படும் சகல விடயங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலைமை வேறு எந்த நாடுகளிலும் இல்லை. இது மிகவும் தவறாகும். இதுபோன்ற நிலைமை நாட்டின் அபிவிருத்திக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்.

அதனால், எதிர்த்தரப்பினர் கூறும் விடங்களைச் சிந்தித்து, இதுதொடர்பில் செயற்படுவது சிறந்ததாக இருக்கும்.

அது பயங்கரவாதச் செயற்பாடாகும். அற்கு எதிராக எதுவும் செய்யாததுபோன்று அநேகமானவர்கள் பேசுகிறார்கள். இருந்தபோதும், அதுதொடர்பில் நீங்கள் கூறுவதுபோன்று பெரும் எண்ணிக்கையிலான வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. இதுகுறித்து மக்கள் அறியாத பிரச்சினைகளும் இருக்கின்றன.

ஆகவே, இந்தப் பிரச்சினைகள் குறித்து மக்கள் தெளிவுப்படுத்துவது சிறந்ததாக இருக்கும். பயங்கரவாதச் செயற்பாடு தொடர்பில் பழைய சட்டங்களைபோன்று செயற்பட்டார்கள். மேலும் தேவைகளை புதிய சட்டத்தினூடாக நிறைவேற்றுவதற்கான தேவையும் இருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நீதிமன்ற விசாரணைகள் தொடர்பில் நாட்டுமக்களுக்கு அறிவிக்காமையின் காரணமாக மக்களுக்கிடையில் குழப்பநிலை உருவாகியுள்ளது - என்றார்.

சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராதா ஜயரத்னவும் இதில் கலந்துகொண்டிருந்ததுடன் உரலுவத்தே தம்ம தக்கித தேரர், மெதகம தம்மாநந்த தேரர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து;

# இழப்பீடு கோரிய வழக்கு சிங்கப்பூரில்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் இழப்பீடு கோரி சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் இலங்கை இன்று சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சட்ட மா அதிபர் சஞ்சய் இராஜரத்தினம் தெரிவித்துள்ளார்.

வழக்கை இலங்கையில் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை உள்ளபோதும், வழக்கின் பிரதிவாதிகள், கப்பலின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், நடத்துநர் மற்றும் முகாமை யாளர்கள் உட்பட வணிக இருப்பு சிங்கப்பூராக இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே௱ பேரழிவு தொடர்பான உரிமை கோரல் நடவடிக்கையை நிறுவுவதற்கு சிங்கப்பூர் பொருத்தமான இடமாக இருக்கு மென்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கப்பலிலிருந்து வெளியேற்றப்படும் பிளாஸ்பக்துகள்களால் இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழலுக்கு நீண்டகாலமாக ஏற்படும் சேதத்தின் முழு அளவு மற்றும் ஈர்ப்புத்தன்மை குறித்த இந்த நடவடிக்கை, சர்வதேச கவனத்தை ஈர்க்கும் என்றும் சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1488 கொள்கலன்களுடன் 2021 மே 20ஆம் திகதியன்று சிங்கப்பூர் கொடியிடப்பட்ட கொள்கலன் கப்பல் தீப்பிடித்தது.

அதில், 25 தொன் நைட்ரிக் அமிலம், 348 தொன் எண்ணெய் மற்றும் 75 பில்லியன் சிறிய பிளாஸ்பக் துகள்கள் உட்பட ஆபத்தான பொருட்களுடன் மொத்தம் 81 கொள்கலன்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியதிச் சட்டங்களை உருவாக்காததன் விளைவை வட மாகாண சபையில் இன்று உணர்கிறார்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)



வடமாகாண சபையில் நியதிச் சட்டங்களை உருவாக்காததன் விளைவை இன்று அவர்களே உணர்ந்திருப்பதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வரணி பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மைதான திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

புலம்பெயர் உறவுகள் ஊடாக இன்று பல கிராமங்கள் அபிவிருத்தியடைந்து வருகின்றன. அவர்கள் உறவுகளைப் பிரிந்து வேறொரு நாட்டில் வேறு காலநிலையில் தம்மை வருத்தி உழைக்கின்றனர். தாம் அனுபவிக்கும் சுகபோகங்களை தமது தாயக மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே புலம்பெயர் உறவுகளின் நோக்கம்.

அந்தவகையில் வரணி ஒன்றியம் பல உதவித் திட்டங்களை வழங்கி வரணி பிரதேசத்தை அபிவிருத்திசெய்து வருகின்றது. எதிர்காலத்தில் அவர்கள் வரணியில் பிறக்கவுள்ள குழந்தைகளுக்கு உதவு தொகையை வழங்கி குழந்தைப் பேற்றினை ஊக்குவிக்கவிருப்பதாக தெரிவித்துள்ளனர். இது மிகவும் அவசியமானதொரு விடயம்.

எமது சனத்தொகை வெகுவாகக் குறைவடைந்து வருகின்றது.

70-75 வருடங்களாக எமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறோம். இறுதியில் உரிமை கிடைக்கும்போது அதனை அனுபவிக்க யார் இருப்பது என்பது அவசியமான விடயம்.

முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயாவின் செவ்வி ஒன்றினைப் பார்த்தேன். அதில் அவர், நாம் மாகாண சபையில் பல நியதிச் சட்டங்களை உருவாக்கியிருக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கியிருந்தால் மத்தியில் இருந்து வரக்கூடிய குடைச்சல்களை தீர்த்திருக்க முடியும் என்று கூறியிருக்கிறார்.

இதைத்தான் நியதிச் சட்டங்களை உருவாக்குங்கள். அதனூடாக எமது மக்களுக்கான செயற்பாடுகளை நாமே முன்னெடுக்க முடியும் என நாம் அன்று சொன்னோம். நியதிச் சட்டங்களை உருவாக்காததன் விளைவை அவர் இப்போதாவது உணர்ந்திருப்பது மிகப்பெரிய விடயம்.

எதிர்காலத்தில்வரும் வட மாகாணசபை தேர்தல் ஊடாக அமைக்கப்படும் சபை பல நியதிச் சட்டங்களை உருவாக்கி மத்திய அரசாங்கம் போடும் தடைகளை தடுத்து நிறுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மாணவர்களுக்கான பஸ் கட்டணத்தை குறைக்க தீர்மானம்

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துக் கட்டணத்தை எதிர்வரும் மே மாதம் 1ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்க எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை மாவட்ட பாடசாலை சிறுவர் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

5% - 8% வரை கட்டணத்தைக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் என்.எம்.கே.ஹரிச்சந்திர பத்மசிறி குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு, கிழக்கு பூரண ஹர்த்தாலுக்கு அனைவரும் அணி திரளவேண்டும்

## ரெலோ ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் அழைப்பு

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கு அனைவரும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அணிதிரள வேண்டும் - என ரெலோ ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற தமிழ்க் கட்சிகளின் போராட்ட அழைப்புத் தொடர்பான ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் 30 வருடகாலமாக பயங்கரவாதச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது பெயர் மாற்றம் செய்து அதைவிட மோசமான சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

புதிய பயங்கரவாதச்சட்டமூலம் நிறைவேற்றப் பட்டால் மக்கள் வீதியில் கூடிப் பேசுவதும் அரசுக்கு எதிரான சதி முயற்சியாக பார்க்கப்பட்டு கைதுசெய்யப்படலாம். நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதச் சட்டம் தமிழ் மக்களை அதிகமாக பாதித்த நிலையில், புதிய சட்டம் நாட்டு மக்களையே பாதிக்கும் அபாயம் உள்ளது.



நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் வலுப்பெற்று வருகின்ற நிலையில், புதிய சட்டமூலத்திற்கும் பெரும்பாலான எதிர்ப்புகள் எழுந்த வண்ணமுள்ளன.

இவ்வாறான நிலையில், தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்தும் முகமாக வடக்கு, கிழக்கு முடங்கும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

எமது கோரிக்கைகளான வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களின் தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்படுதல், திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்றவற்றை அரசு நிறுத்த வேண்டும்.

ஆகவே, தமிழ் மக்கள் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கும் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை அபகரிப்பதற்கு எதிராக அரசாங்கத்துக்கு செய்தியை கூறுவதோடு சர்வதேசத்தின் பார்வையை ஈர்ப்பதற்கும் எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு



சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில் பகுதியில் அமைந்துள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டு வளவிலிருந்தே கைக்குண்டு ஒன்று நேற்று (23) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியர் வீட்டு வளவை சுத்தம்செய்து கொண்டிருந்த பொழுது கைக்குண்டை கண்டெடுத்துள்ளார். இதையடுத்து வைத்தியர் கைக்குண்டை எடுத்துக் கொண்டு சாவகச்சேரி தம்பதோட்ட இராணுவ முகாமிற்கு சென்று அந்த கைக்குண்டை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பாக இராணுவத்தினரால் சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கில் நடத்தப்படவுள்ள ஹர்த்தாலுக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆதரவு

பாராளுமன்றத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்தும், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு கண்டனம் தெரிவித்தும் வடக்கு, கிழக்கில் நடத்தப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தனது முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்படி எதிர்ப்பு நடவடிக்கை வெற்றிபெற அனைத்துத் அரசியல் தரப்புகளும் பரந்துபட்ட உழைக்கும் மக்களும் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் எனவும் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது ஏற்கனவே 44 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிடக் கொடூரமானதாகும். அச்சட்டத்தின்கீழ் கைது, தடுத்துவைப்பு, நீண்டசிறை, சித்திரவதை, சிறை இறப்பு போன்ற கொடுமைகளைத் தமிழ் மக்களும் மலையக மக்களும் நீண்டகாலமாக அனுபவித்துவந்தனர். தமிழ் மக்களைத் தொடர்ந்து முஸ்லிம் மக்கள் மீதும் அச் சட்டம் பாய்ச்சப்பட்டது. அண்மைக்காலத்தில் சிங்கள மக்களுக்கு எதிராகவும் திருப்பப்பட்டு வந்துள்ளது. இச்சூழலிலேயே உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்படவேண்டும் எனும் கோரிக்கை வலுவடைந்து வந்தது. இவற்றின் காரணமாகவே புதுச் சட்டமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ரணில் தலைமையிலான ஆட்சி கொண்டுவந்து நிறைவேற்றத் துடித்து நிற்கின்றது.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஜனநாயக வழிகளில் காட்டப்படும் எந்தவொரு எதிர்ப்பும் இச்சட்டம் கொண்டு அடக்கி ஒடுக்கப்படும் அபாயமே உருவாகும்.

எனவே, ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் விரும்பும் ஒவ்வொருவரும் இச்சட்டதை நாடுபூராவும் உள்ள மக்களோடு இணைந்து நின்று எதிர்ப்பது அவசியமாகும். அதேபோன்று வடக்கு, கிழக்கில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக மக்கள் தமது கடுமையான எதிர்ப்பை இவ் ஹர்த்தால் மூலம் வெளிப்படுத்துவது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துகிறோம். எமது கட்சி பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்தே அதனை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறது.

எமது கட்சியும் அச்சட்டத்தால் அடக்குமுறைகளை அனுபவித்திருக்கிறது. அதேபோன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும், திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலையும் எப்பொழுதும் எமது கட்சி கண்டித்து நிராகரித்து வந்துள்ளது. ஆதலால் மேற்குறித்த இரண்டு விடயங்களை முன்வைத்து இடம்பெறவுள்ள ஹர்த்தால் எதிர்ப்பை எமது கட்சி முழுமையாக ஆதரிக்கின்றது – என்றுள்ளது.

# கல்கிஸையில் 71 கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

ஒரு கோடியே ஐம்பது இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கல்கிஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுபெத்த வீதித் தடுப்பில் சந்தேகத்திற்கிடமான பட்டா ரக வாகனம் ஒன்றை சோதனையிட்டபோது, 71 கிலோ 160 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவை - தெலவல பிரதேசத்திற்கு குறித்த சந்தேகநபர் கேரள கஞ்சாவுடன் பயணித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த நபரை மொரட்டுவ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகளை அடித்து வேலை வாங்குவதுபோல் எங்களை பயம் காட்டி வேலை வாங்கமுடியாது!

## பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் எமது கடமைக்குப் புறம்பான பணி என்கிறார் பேராதனைப் பல்கலை கலைப்பீட விரிவுரையாளர் சங்கத் தலைவர் அர்ஜுன பராக்கிரம

(கண்டி நிருபர்)

மாடுகளை அடித்து வேலை வாங்குவதுபோல் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை பயம் காட்டி வேலை வாங்க முடியாது என பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்கள் சங்கத் தலைவர் கலாநிதி அர்ஜுன பராக்கிரம தெரிவித்தார்.




பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது,

க.பொ.த. (உ/த) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடாத விரிவுரையாளர்களின் உடைமைகளை அரச உடைமையாக்குவதாகக் கூறுபவர்கள் முடியுமாயின் அதனைச் செய்து காட்டவேண்டும். ஏனெனில், அப்படி செய்யமுடியாது. இது எமது கடமைக்கு புறம்பான மேலதிக ஒரு பணியாகும், அதனை விரும்பினால் மட்டுமே செய்ய முடியுமே தவிர வற்புறுத்தி வேலை வாங்க முடியாது. இது எமது அன்றாடக் கடமைகளில் ஒன்றல்ல. ஆடு, மாடுகளை அடித்து வேலை வாங்குவது போல் எம்மைப் பயமுறுத்தி வேலை வாங்க முடியாது என்றார்.

இங்கு உரையாற்றிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத் தலைவர் பேராசிரியர் சியாம் பனஹெக்க தெரிவித்தாவது,

கல்வி அமைச்சர் சாதகமான பதில் தரும்போது அதனைக் குழப்பும் வகையில் மற்றவர்கள் கருத்துகளை வெளியிடக்கூடாது. ஏதாவது ஒரு அடிப்படையில் தளர்வுத்தன்மை கொண்ட பதில் கிடைக்குமாயின் நாம் அதனை ஏற்று திருத்தப் பணிகளில் ஈடுபடத் தயாராக உள்ளோம் என்றார். திருத்தப் பணிகளில் ஈடுபடாவிட்டால் எமது உடைமைகளை அரச உடைமையாக்குவோம் என பயமுறுத்தி வேலை வாங்க முடியாது என்றார்.

# நானுஓயா – இராகலை வரையான புதிய ரயில் பாதை விரைவில் நிர்மாணிக்கப்படும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)



நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து நுவரெலியா மற்றும் இராகலை வரை பயணிக்ககூடிய புதிய ரயில் பாதை வெகுவிரைவில் நிர்மாணிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா பகுதிக்கு கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா நகருக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ரயில் சேவை தேவையாக உள்ளது. எனவே, மத்திய மாகாண ஆளுநர் காலத்தில் செயற்பட்ட நுவரெலியா - கந்தப்பளை ரயில் நிலையத்துக்கிடையில் ரயில் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக புதிய ரயில் பாதையும் நிர்மாணிக்கப்படும்.

நுவரெலியாவில் இருந்து கொழும்புவரை மரக்கறிகளை கொண்டுவருவதற்கு நானுஓயா ரயில் நிலையத்தை மையப்படுத்தி பொருளாதார மத்திய நிலைய பிரிவொன்று அமைக்கப்படும். எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நானுஓயா ரயில் நிலையத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர், நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து எல்லவரை செல்வதற்கு காத்திருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் நட்பு ரீதியில் கலந்துரையாடினார். ரயில் நிலைய அதிகாரிகளையும் சந்தித்தார்.

# 25 மாவட்டங்களுக்கும் ஜனாதிபதியால் பாதுகாப்புக்காக முப்படையினர் அழைப்பு

## விசேட வர்த்தமானி வெளியானது

பொது மக்களின் அமைதியைப் பேணுவதற்காக நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் முப்படையினரை பணிக்கு அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் (22) சனிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், கம்பஹா மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், களுத்துறை மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டம், காலி மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், மாத்தறை நிர்வாக மாவட்டம் மற்றும் அந்த மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், அம்பாந்தோட்டை மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், கிளிநொச்சி மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், மன்னார் மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், அம்பாறை மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், திருகோணமலை மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், குருநாகல் மாவட்டம், புத்தளம் மாவட்டம் மற்றும் மாவட்டத்தை அண்மித்துள்ள ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கும், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கும் முப்படையினர் பாதுகாப்பு கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எக்பர்த் பாடசாலையில் நாளை அமுதவிழா

இரத்தினபுரி மாவட்டம் சூரியகந்தை எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தின் அமுதவிழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் குமுதினி மோகன்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கலந்துகொள்ளவுள்ளார். சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார செயலாளர் சுஜானி ஆர்.விஜேதுங்க சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார்.

மேலும், சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி டபிள்யூ. எஸ்.ஏ.புஷ்பகுமார டயஸ், மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சகுந்தலா மனோகரன், எம்பிலிபிட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.ஜீ.அநுர அபேவிக்கிரம, கொலன்ன பிரதேச செயலாளர் அமில ஜயசிங்க, கொலன்ன கோட்டக் கல்விப் பணிப்பாளர் டபிள்யூ.சுஜித் பிரியந்த ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சாதாரண தரம், உயர்தரம் ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்ற மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்விகற்று பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவான மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், பாடசாலையின் ஆரம்ப காலங்களிலிருந்து பணியாற்றிய அதிபர்கள், தற்போது பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கும் விசேட கௌரவிப்பு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் இந்நிகழ்வின்போது பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.



உடப்பு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் புதிய நிர்மாண வேலையை முன்னிட்டு அடிக்கல் நடும் வைபவம் நேற்று (23) காலை 9 மணி முதல் 10 மணி வரையிலான சுப நேரத்தில் இடம்பெற்றது. இதன்போது உடப்பு இந்து ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் கலந்துகொண்டு பூஜைகளை ஆரம்பித்துவைத்தார். (உடப்பு செய்தியாளர்)

# மூன்று வருடங்களுக்கொரு முறை பூக்கும் ஜப்பான் நாட்டின் 'சகுரா' மலர் இலங்கையில்

(கண்டி நிருபர்)

மூன்று வருடங்களுக்கொரு முறை பூக்கக் கூடிய 'சக்குரா' மலர் ஊவா – வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் பூத்துள்ளது.

இது 2017ஆம் ஆண்டு ஜப்பானில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதாகும். இது இறுதியாக 2020ஆம் ஆண்டு ஒரு முறை மலர்ந்துள்ளது. அதன்பின் தற்போது மலர்ந்துள்ளது. இந்த மலருக்கு பொருத்தமான காலநிலை இங்கு காணப்படுவதாகக் கூறப்படுகிறது.



மூன்று வருடங்களுக்கொரு முறை பூக்கக்கூடிய மேற்படி மலரை, பேராசிரியர் ஆனந்தகுமார ஜப்பான் - இலங்கை ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் ஜப்பான் சென்றபோது கொண்டு வந்ததாகவும், அதனை ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஜயந்தலால் ரத்னசேகர ஆய்வு அடிப்படையில் இங்கு நாட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பந்துல குணவர்தனவின் தயாரிப்பில் வெளியான சிங்களத் திரைப்படம் 'சஹா'

## ஊடகவியலாளர்களுக்கு மட்டும் விசேட காட்சி

(அஷ்ரப் ஏ.சமத்)





அமைச்சர் பந்துல குணவர்தன தயாரித்த சிங்களத் திரைப்படமான 'சஹா' விசேட காட்சியாக ஊடகவியலாளர்களுக்கு மட்டும் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமைname இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் சினிமா அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டது. திரைப்படத்தின் கதை மற்றும் இணை தயாரிப்பாளராக பேராசிரியர் ஆரியரத்ன அத்துக்கல செயற்பட்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் பந்துல குணவர்தன, திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தீபால் சந்திரரத்ன மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டதுடன், இலங்கையின் பல்வேறு ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களுக்கும் இத்திரைப்படம் விசேடமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த 40 ஆண்டுகளாக பல சிங்களத் திரைப்படங்களைத் தயாரிப்பதுடன், அவரது சிங்களத் திரைப்படங்கள் சில விசேட விருதுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் மற்றும் பல்கலைக்கழக பெண் விரிவுரையாளர் சக வகுப்பு மாணவனுடன் தொடர்புகள், மாணவர்கள் போராட்டத்தின் சிறைவாச அனுபவங்கள் போன்றன சித்தரிக்கப்பட்டுள்ளன.

இத்திரைப்படம் நாட்டில் சகல திரையரங்குகளிலும் திரையிடப்பட்டுள்ளது. இதேவேளை அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் திரைப்படத் தயாரிப்பில் லெஸ்டர் ஜே.எம்.பீரிஸ் உட்பட பல்வேறு தயாரிப்பாளர்கள் இணைந்து செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அத்தக்வா டிரஸ்ட்டின் ஏற்பாட்டில் ரியாஸ் மௌலவி தலைமையில் கம்பளை தேசிய உரிமைகள் மத்திய நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் (22) காலை நோன்புப் பெருநாள் தொழுகை இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படங்கள் - கம்பளை நிருபர்)

# சட்டவிரோத மணல் அகழ்வு; பளையில் இருவர் கைது

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகாவில் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றப்பட்ட இரு டிப்பர் வாகனங்களுடன் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகாவில் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றப்பட்ட இரு டிப்பர் வாகனங்களுடன் அவற்றின் சாரதிகள் நேற்று முன்தினம் (22) பளை விசேட பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்கள் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர்.



புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு மாத்தளை கொங்காவலை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்ற ஈதுல்பித்ர் பெருநாள் தொழுகையின்போது, மேற்படி பள்ளிவாசலின் பிரதம பேஷ் இமாம் அஷ்ஷேக் மௌலவி பஷ்ரின் குத்பா பிரசங்கம் நிகழ்த்துவதையும் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: மாத்தளை செய்தியாளர்)

# மலையகத்திலும் நோன்புப் பெருநாள் கொண்டாட்டம்





(எஸ்.கணேசன்)

'ஈதுல் பித்ர்' எனப்படும் ஈகைத் திருநாளானது சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் இவ்வுலகில் பரப்பும் நோக்கில் இஸ்லாமியர்கள் கொண்டாடும் ஓர் உன்னதமான பெருநாள் விழாவாகும்.

இஸ்லாமியர்களுக்கு ஐம்பெரும் கடமைகள் உண்டு. அதில் ஒன்றே ரமழான் நோன்பு. ஆண்டுதோறும் வரும் மற்ற மாதங்களைக் காட்டிலும், ரமழான் பெருநாள் வரும் மாதமே இஸ்லாத்தில் சிறந்த மாதமாகக் கருதப்படுகின்றது.

30 நாட்கள் உண்ணாமல், பருகாமல், நோன்பிருந்து இறைவனை விழித்திருந்து, தனித்திருந்து, இறைமறையை தினம் ஓதி, இல்லாதவருக்கு ஈந்து, இறைவழிபாட்டில் முழுமையாக தன்னை ஈடுபடுத்தி, அதன் இறுதியாக இன்பமுடன் பெருநாளை கொண்டாடுகின்றனர்.

அந்தவகையில் மலையகத்தில் முஸ்லிம்கள் நோன்புப் பெருநாள் பண்டிகையை நேற்று முன்தினம் (22) விசேட தொழுகையில் ஈடுபட்ட பின்னர் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

அந்தவகையில் ஹட்டன் நகரில் பிரதான ஜும்மா பள்ளிவாசலில் ஹட்டன் முஸ்லிம் மக்கள் விசேட நோன்புப் பெருநாள் தொழுகையிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டிருந்தனர். பிறகு தமது பண்டிகையை முஸ்லிம் மக்கள் சந்தோஷமாக கொண்டாடியதை காணக்கூடியதாக இருந்தது.

# வடக்கு – கிழக்கில் நாளை இடம்பெறவுள்ள பொது கடையடைப்புப் போராட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுப்பு

(யாழ். நிருபர்)

வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் நாளை (25ஆம் திகதி) பொது கடையடைப்புப் போராட்டத்திற்கு 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

யாழிலுள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவமயமாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் இக்கடையடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



இவ்வூடக சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

# வரணியில் கடுங்காற்றினால் ஆலயம் – வீடுகள் சேதம்

(சாவகச்சேரி நிருபர்)



தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வரணி, நாவற்காடு பகுதியில் நேற்று முன்தினம் (22) பிற்பகல் வீசிய கடுங்காற்று காரணமாக ஆலயம் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளன.

திடீரென வீசிய காற்றினால் நாவற்காட்டில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றின் மேற்கூரை தூக்கி வீசப்பட்டிருப்பதுடன், தென்னை மற்றும் பனை மரங்கள் முறிந்து வீடுகளும் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மரங்கள் வீதிகளில் முறிந்து விழுந்து போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டதுடன், மின்சாரமும் சிறிதுநேரம் தடைப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ‘வடமாகாண பெண்கள் குரல்’ என்ற அமைப்பு யாழில் அங்குரார்ப்பணம்

(யாழ். நிருபர்)

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு ‘வடமாகாண பெண்கள் குரல்’ என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதுடன், நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் குறித்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.




இதன் முதல் செயற்பாடாக காணிகளை விடுவிக்கக் கோரி வடமாகாண ஆளுநர் செயலகத்தில் மகஜர் கையளிக்கப்பட்டது.

# மாடுகளைத் திருடி இறைச்சியாக்கி விற்பனைசெய்த கும்பல் யாழில் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல பகுதிகளில் மாடுகளைக் களவாடி இறைச்சியாக்கி விற்பனைசெய்த கும்பலின் முக்கிய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுக் கும்பலிடம் இறைச்சியை வாங்கி விற்பனை செய்தவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கூறிய பொலிஸார், மேலும் நால்வர் தேடப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 24, 26 வயதுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர், வட்டுக்கோட்டை, அளவெட்டி, தெல்லிப்பழை, வடமராட்சி உள்ளிட்ட பிரதேசங்களில் 25இற்கும் மேற்பட்ட மாடுகளைத் திருடு இறைச்சியாக்கி விற்பனைசெய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

5 பேர் கொண்ட கும்பல், பகலில் மோட்டார் சைக்கிளில் சென்று மாடுகளை நோட்டமிட்டுவந்து இரவில் வாகனத்தில் சென்று இரும்புச்சங்கிலி போட்டு மாடுகளை ஏற்றிவந்து கப்பூது வெளியில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளது.



இறைச்சியாக்கப்பட்ட மாடுகளின் எச்சங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், இரும்புச்சங்கிலி மற்றும் வாள் ஒன்றும் முதன்மைச் சந்தேக நபரிடம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குகள் உள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

# டெவோன் நீர்வீழ்ச்சியில் பாய்ந்து 04 பிள்ளைகளின் தாய் மரணம்

(எஸ்.கணேசன்)

குடும்பத் தகராறு தொடர்பில் திம்புள்ள - பத்தனை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய வந்த தாயொருவர், பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள டெவோன் நீர்வீழ்ச்சியில் குதித்து உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் கடந்த சனிக்கிழமையன்று மாலை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளது.

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகாவத்தை பகுதியில் வசிக்கும் லெட்சுமனன் நிஷாந்தினி (வயது - 34) என்ற நான்கு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு நீர்வீழ்ச்சியில் பாய்ந்து உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு தொடர்பில் முறையிடுவதற்கு இரு பிள்ளைகள் சகிதம் இவர் பொலிஸ் நிலையத்துக்கு வந்துள்ளார். முறைப்பாடு செய்ததையடுத்து ஒரு பிள்ளை சகிதம் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சென்றுள்ளார்.

அதன்பின்னர் குடிப்பதற்கு நீர் எடுத்து வருமாறு அந்த பிள்ளையிடம் கூறியுள்ளார். பிள்ளை அங்கிருந்த சென்ற பின்னர் நீர்வீழ்ச்சியில் குதித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கொட்டகலை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும், பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை திம்புள்ள – பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரை காலத்தை மட்டுப்படுத்த முடிவு

(மஸ்கெலியா செய்தியாளர்)

சிவனொளிபாதமலைக்கான யாத்திரை காலத்தை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பாட்டுக் குழு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரை குறித்து அதன் ஏற்பாட்டுக் குழுவினரின் கலந்துரையாடல் ஒன்று சிவனொலிபாதமலையின் தலைவரும் உவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமான வணக்கத்திற்குரிய பெங்கமுவே தம்மதின தேரர் தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ,

சிவனொலிபாதமலை பருவகாலத்தில் பல பிரச்சினைகள் இடம்பெற்று வருவதாக அறிய முடிகிறது. இவற்றை கருத்தில் கொண்டே மேற்படி யாத்திரையை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவினரால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சிவனொலிபாதமலையின் தலைவரும் உவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமான வணக்கத்திற்குரிய பெங்கமுவே தம்மதின தேரர், சிவனொலிபாதமலை யாத்திரை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் ஆரம்பிக்கப்பட்டு வெசாக் பௌர்ணமி தினத்தில் நிறைவடைகின்றது.

சிவனொலிபாதமலை யாத்திரை காலத்தில் மழை, காற்று பருவம் உள்ளதால் இந்த காலம் சிவனொலிபாதமலை யாத்திரைக்கு செல்லும் மக்களுக்கு உகந்த காலமாக அமைகிறது என அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன மற்றும் அரச அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பலாங்கொடை உணவகங்களில் திடீர் சோதனை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நகர மற்றும் புறநகர் கிராமப் பகுதிகளில் உணவகங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கூட்டாக சென்று இவற்றை பரிசோதித்து வருகின்றனர்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டின் பின் அதிகாரிகள் தமது சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இவற்றின் பலவற்றில் பொதுமக்களின் பாவனைக்குதவாத உணவுப் பொருட்களும் காலாவதியான உணவு வகைகளும் அழிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதன்முறையாக சோதனைக்குட்படுத்தப்படும்போது இனங்காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் உணவக உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்படுவதாகவும் இந்நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மஸ்கெலியா நீர்த்தேக்கத்திலுள்ள சண்முகநாதர் ஆலயத்தில் விசேட பூஜை

(மஸ்கெலியா செய்தியாளர்)

மவுஸாக்கலை நீர்த்தேக்கத்தில் மூழ்கியிருந்த ஸ்ரீ சண்முகநாதர் ஆலயம் வறட்சி காரணமாக வெளிப்பட்டுள்ள நிலையில் மஸ்கெலியா புரவுன்லோ தோட்ட மக்களால் நேற்றுமுன்தினம் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை ஸ்ரீ சண்முகநாதருக்கு விசேட அபிஷேகம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்தப் பூஜை, வழிபாடுகளை புரவுன்லோ தோட்ட மக்கள் ஒன்றிணைந்து நடத்தினர்.



நாட்டின் மின்சார தேவைக்காக கடந்த 1969ஆம் ஆண்டு 95 ஆயிரம் ஹெக்ரேயர் தேயிலைத் தோட்டங்கள் அடங்கிய காணியில் இந்த மவுசாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது.

இதனால் சில ஆலயங்கள், பாடசாலைகள், தேயிலைத் தொழிற்சாலைகள், பௌத்த விகாரை, இஸ்லாமிய பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம், மூன்று நகரங்கள், இரண்டு சினிமா கொட்டகைகள், தேயிலைத் தோட்டங்கள் தொழிலாளர் குடியிருப்புகள் ஆகியன முற்றிலும் நீரில் மூழ்கின.

அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த பெரிய கங்காணிகள் ஒன்றிணைந்து மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்தை இந்தியாவிலிருந்து ஆலய கட்டுமானப் பணிக்காக அழைத்துவந்து தனி கருங்கற்கள் மூலம் யானைகளின் உதவியுடன் 1910 ஆண்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 1917 ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடந்தது.

அந்தக் காலத்தில் ஆலய தலைவராக ம.செட்டியார் பிள்ளை மற்றும் இப்பகுதியில் இருந்த பெரிய கங்காணிகள் ஒன்றிணைந்து நடத்தினார்கள்.

சுமார் 52 வருடங்களாக இந்த ஆலயத்தில் சிறப்பாக நாளாந்த பூஜைகள் மற்றும் சகல இந்து மத திருவிழாக்கள், வருடாந்த பங்குனி உத்திர திருவிழா முறையாக நடைபெற்று அன்னதானம் வழங்கப்பட்டது.

1969 ஆம் ஆண்டு நாட்டின் தேவைகேற்ப நீர் மின் உற்பத்திக்கு நீரை சேமித்து வைக்க இந்த மவுஸாக்கலை நீர்தேக்கத் திட்டம் 1961இல் ஆரம்பிக்கப்பட்டு 1969ஆம் ஆண்டு நிறைவடைந்தது.

அப்போது முதல் 2023 வரை 54 வருடங்கள் நீரில் மூழ்கிய நிலையில் இருக்கும் இந்த ஆலயத்தில் வருடாந்தம் நீர் வற்றும்போது பூஜைகள் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மர்மமான முறையில் மாணவி உயிரிழப்பு

(பெல்மதுளை செய்தியாளர்)

இரத்தினபுரி புதிதாக அமைக்கப்பட்ட பலாவெல பொலிஸ் பிரிவிலுள்ள ரம்புக்கந்த தோட்டத்தில் பாடசாலை மாணவியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.



இரத்தினபுரி குழந்தை இயேசு கன்னியர் மட தேசிய பாடசாலையில் தமிழ் மொழி மூலப்பிரிவில் 11ஆம் தரத்தில் கல்வி கற்ற, இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயாராகவிருந்த மாணவியான கணேசன் ருக்ஷானி (வயது 15) என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனது வீட்டல் போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் வீட்டுக்கருகில் உள்ள வழமையாக படுத்துறங்கும் தனது தந்தையின் தங்கை உறவு முறையிலானவரின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை (20) இரவு 10.00 மணியளவில் படுத்துறங்கியுள்ளார். அதிகாலைவேளையில் தனது அருகில் படுத்துறங்கிய அத்தையிடம் தண்ணீர் கேட்டு அருந்திய பின்னர் படுத்துறங்கிய மேற்படி மாணவி மறுநாள் அதிகாலை 5.00 மணியளவில் அத்தை உள்ளிட்ட உறவினர்கள் எழும்பி பார்த்தபோது கீழே தரையில் படுத்துக் கிடந்துள்ளார்.

உடனடியாக இது குறித்து மாணவியின் பெற்றோருக்கு அறிவித்து இரத்தினபுரி வைத்திய சாலைக்கு கொண்டுசென்ற நிலையில் அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக அறிவித்துள்ளனர்.

இதன் பின்னர் இது குறித்து உரிய பொலிஸாருக்கு அறிவித்த பின்னர் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டு மாணவியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து இரத்தினபுரி நீதவான் நீதி மன்ற நீதவான் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்வதற்கான விசேட வைத்திய நிபுணர் விடுமுறையில் இருப்பதனால் பரிசோதனையில் தாமதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் அண்மையில் இரத்தினபுரி புதிய நகர விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

## ஈராண்டு விளையாட்டு விழாவை இணைந்து நடத்திய இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் மற்றும் ஐக்கிய தென்னிந்திய பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன விளையாட்டுக் கழகம்

இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் (PA) ஐக்கிய தென்னிந்திய பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன விளையாட்டுக் கழகமும் (UPASI SC) இணைந்து 2023 மார்ச் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை ஈராண்டுக்கோர் முறை நடத்தப்படும் விளையாட்டு விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஈராண்டுக்கோர் முறை நடத்தப்படும் இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கெட், கோல்ப், (GOLF) டென்னிஸ், பூப்பந்து (Badminton) மற்றும் பில்லியர்ட்ஸ்ஃஸ்னூக்கர் ஆகிய ஐந்து விளையாட்டுகள் உள்ளடங்கியுள்ளன.

UPASI SC விளையாட்டுக் கழகத்தின் உயர்மட்ட குழு 2019இல் வருகைதர திட்டமிடப்பட்டிருந்ததெனினும், கொவிட் பெருந்தொற்று காரணமாக விதிக்கப்பட்ட பயணத்தடையினால் இவ்விளையாட்டு விழா 2023ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனவே, இவ்விரு சங்கங்களும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இவ்விளையாட்டு விழாவில் மீண்டும் இணைவதில்



பெருமகிழ்ச்சியடைந்தனர்.

இலங்கை பெருந்தோட்ட குழு (RPC) கோல்ப் (GOLF) விளையாட்டில் தமது திறமையை வெளிக்காட்டி 20 வருடங்களுக்கு பிறகு விருதை தனதாக்கியது. இவ்விளையாட்டில் தரிந்து விக்ரமசிங்க மிக திறமையாக விளையாடி ஒட்டுமொத்த அணிக்கான விருதை பெற்று தந்ததுடன் 'Stable Ford' விருதையும் வென்றார். அத்துடன் இவ்விளையாட்டு விழாவில் இலங்கை பெருந்தோட்ட குழு கிரிக்கெட் மற்றும் பூப்பந்து (Badminton) விளையாட்டுகளிலும் வெற்றி பெற்றது.

கிரிக்கெட் விளையாட்டின் சிறப்பம்சமாக துடுப்பாட்ட வீரர் சத்துர பண்டார தனது மிகச் சிறந்த துடுப்பாட்டத்தினால் சதம் பெற்றதுடன் சிறந்த துடுப்பாட்ட வீரர், ஆட்ட நாயகன் ஆகிய விருதுகளை வென்றார்.

இலங்கை பெருந்தோட்டங்களின் பூப்பந்து (Badminton) குழு ஒற்றையர் பிரிவில் சமித் ஆர்த்தரின் திறமையான ஆட்டத்தால் விருதை வென்றது. மூத்தோருக்கான இரட்டையர் பிரிவில் ரொஹான் வீரக்கோன் மற்றும் லலிந்திர அபேவர்தன இணைந்து விருதை பெற்றனர். அத்துடன் சமித் ஆர்த்தர் பண்டார வித்தாரண இணைந்து தமது எதிரணியை தோற்கடித்து இரட்டையர் பிரிவிற்கான விருதை பெற்றனர்.

ரதல்ல கிரிக்கெட் மைதானம், ரோயல் கொழும்பு கோல்ஃப் கழகம், தரவளை கழகம் ஆகியன இவ்விளையாட்டு விழாவினை ஐந்து நாட்கள் நடத்த உதவினர்.

## 35 வருட கால சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் சிறப்பைக் கொண்டாடும் செலான் வங்கி




1988ஆம் ஆண்டு தனது சேவைகளை ஆரம்பித்திருந்த, அன்புடன் அரவணைக்கும் வங்கி செலான் வங்கி, வாடிக்கையாளர்களுக்கான தனது 35 வருட கால சேவைப் பூர்த்தியை கொண்டாடுகின்றது. சகல பங்காளர்களுக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்புடன் சிறப்பைப் பெற்றுக் கொடுத்த வண்ணமுள்ளது. இச் சிறப்பைக் குறிக்கும் விசேட வைபவம், வங்கியின் மில்லேனியம் கிளையில் அண்மையில் சமய அனுஷ்டானங்களுடன், ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், கூட்டாண்மை நிர்வாகத்தினர், ஊழியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் விசேட அதிதியாக கலந்து கொண்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, நிகழ்வில் பிரதம உரையை ஆற்றியிருந்தார். செலான் வங்கியின் தலைவர் ரவி டயஸ் மற்றும் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றியிருந்தனர்.

செலான் வங்கி தனது முதல் கிளையை ஆரம்பித்தது முதல், நாடளாவிய ரீதியில் தனது கிளை வலையமைப்பை விஸ்தரிப்புச் செய்துள்ளதுடன், தனது 171 கிளைகள், 216 ATMகள், 70 பண வைப்பு இயந்திரங்கள் மற்றும் 96 காசோலை வைப்பு இயந்திரங்கள் மற்றும் பல டிஜிட்டல் வங்கிச் சேவை தீர்வுகள் ஆகியவற்றைக் கொண்டு, வளர்ந்து செல்லும் சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்கள், தனிநபர் மற்றும் கூட்டாண்மை வியாபார வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றது.

## SLIM KANTAR மக்கள் விருதுகள் 2023இல் இரண்டு வெற்றியை பெற்றுள்ள Daraz

2023 ஏப்ரல் 3 – மதிப்புமிக்க SLIM-KANTAR மக்கள் விருதுகள் 2023இல், இலங்கை மக்கள் Daraz ஐ 'ஆண்டின் சிறந்த சேவை வர்த்தக தளம்' என வாக்களித்தனர். இந்த வருட விருதுகளில் தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் Daraz "இளைஞர் தெரிவு – ஆண்டின் சிறந்த சேவை வர்த்தக நாமம்" என்ற பட்டத்தை வென்றுள்ளது.




"ஆண்டின் சிறந்த சேவை வர்த்தகநாமம்" விருது அனைத்து சேவைத் துறைகளிலும் சிறந்த சேவை வழங்குநரை அங்கீகரிக்கும் ஒரு விருதாகும். தெற்காசியாவின் முன்னணி இலத்திரனியல் தளமான Daraz வழங்கும் பல்வேறு வகையான உள்ளடக்கிய மற்றும் அணுகக்கூடிய சேவைகளுக்கு இது ஒரு சான்றாகும். தொழில்நுட்பத்தின் மாற்றும் ஆற்றலைப் பயன்படுத்தி, Daraz ஆனது அதன் பல்துறை தளத்தின் மூலம் ஒரு விதிவிலக்கான இலத்திரனியல் வர்த்தக சுற்றுச்சூழல் அமைப்பை வழங்குகிறது, இது ஆயிரக்கணக்கான விற்பனையாளர்களை நாடளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுடன் இணைக்கிறது. அனைத்து இலங்கையர்களுக்கும் மேலும் உள்ளடக்கிய ஒன்லைன் ஷொப்பிங் அனுபவத்தை உருவாக்க, புதிய மற்றும் புதுமையான டிஜிட்டல் நிதி தீர்வுகளை உள்ளடக்கிய நெகிழ்வான கட்டண முறைகளையும் Daraz வழங்குகிறது.

## DFCC Junior Avurudu மூலம் வியப்பூட்டும் வெகுமதிகள்




இளம் வயதிலேயே பணத்தைச் சேமிப்பதைத் தொடங்குவதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்ற, அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, 2023 சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கான தனது DFCC Junior Avurudu ஊக்குவிப்புப் பிரசாரத்தை மீண்டும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. இந்தப் பிரசாரம் இளம் வயதிலேயே பணத்தைச் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கிறது. அத்துடன், புதிய மற்றும் ஏற்கனவே DFCC Junior கணக்கை வைத்திருப்பவர்கள் புதிய வைப்புத்தொகையை மேற்கொள்வதன் மூலம் விசேட வெகுமதியைப் பெறுவதற்கான தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

## Sling Mobility ஊடாக பரீட்சார்த்த முயற்சியை ஆரம்பிக்கவுள்ள Uber

இலங்கையின் முன்னணி Ridesharing செயலிகளில் ஒன்றான Uber, இலங்கையில் Smart மின்னியக்க வாகன (EV) சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியாக platform as a service (PaaS) தளத்தை வழங்கும் Sling Mobility ஊடாக ஒரு பரீட்சார்த்த முயற்சியை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பரீட்சார்த்த முயற்சியின் ஒரு பகுதியாக, Uber ஆனது அதன் இயங்குதளத்தில் Sling Mobility ஊடாக இயக்கப்படும் மின்னியக்க இரு சக்கர வாகன தொகுதியை இணைக்கவுள்ளது. Uber தளத்துடன் ஏற்கனவே இணைந்திருக்கும் ஓட்டுனர்கள் மற்றும் புதிய ஓட்டுநர் பங்காளர்களுக்கு EV தேர்ந்தெடுப்பு (adoption) செலவைக் குறைக்கும் முகமாக, பிரத்தியேகமான மின்கலன் சந்தா மாதிரி உட்பட எளிதான நிதி தீர்வுகளையும் Sling வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

Sling மின்னியக்க வண்டிகளில், Uber தளத்தில் உள்ள ஓட்டுநர் பங்காளர்கள் பல்வேறு பிரிவுகளில் தொழிலில் ஈடுபட முடிகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 'Uber Moto' வுடன் வண்டிகளில் பயணிகளை ஏற்றுவதும், 'Uber Connect', ஓலை, பொதிகளை விநியோகிப்பதும் இவற்றில் அடங்கும். இந்த கூட்டாண்மை மூலம், இலங்கையில் நிலையான இயங்குதலை ஸ்திரப்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக Uber நிறுவனமானது, தனது தளத்தில் இரு சக்கர மின்னியக்க வாகனங்களை இணைத்ததன் மூலம், இம்முயற்சியை அறிமுகப்படுத்திய முதல் Ridesharing தளமாக உள்ளது.

## தொலைபேசி அழைப்பின் மூலம் மருத்துவ ஆலோசனைகளை வழங்கும் DoctorOnline

இலங்கை மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்துள்ள மருத்துவர்களிடமிருந்து தான் விரும்பும் எந்த நேரத்திலும் வீடியோ அழைப்பின் ஊடாக மருத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கான வாய்ப்பினை DoctorOnline சேவை மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. DoctorOnline எனப்படுவது Mobios இனால் Virtual Hospital Pvt Ltd நிறுவனத்துக்கு உருவாக்கித் தந்துள்ள https://www.docotoronline.lk இணையதளத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற புத்தம் புதிய மருத்துவ சேவை ஆகும்.

இணையத்தின் ஊடாக மருத்துவ ஆலோசனைகளை வழங்கும் நடைமுறை தற்போது பெருமளவில் பிரபல்யமடைந்துள்ளதோடு DoctorOnline சேவை மருத்துவர்களுக்கு தொலைவிலிருந்தே நோயாளிகளுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது. DoctorOnline மருத்துவ ஆலோசனைகளை வழங்குதல், மருத்துவர்கள், தாதியர்கள் இயன் மருத்துவவியலாளர்கள் (பிசியோதெரபிஸ்ட்) ஆகியோரின் சேவையினை வழங்குதல்,




இரசாயனக்கூட பரிசோதனைகளுக்கான மாதிரிகளை சேகரித்தல் மற்றும் மருந்து விநியோகம், அன்பியூலன்ஸ் சேவை உள்ளிட்ட வீட்டிலிருந்தவாறே மருத்துவச் சேவையினை பெறுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்குகிறது.

வீட்டிலிருந்து சிகிச்சை பெறுகின்ற நோயாளி ஒருவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றதைப் போல சகல சேவையினையும் DoctorOnline மூலம் பெற முடிவதோடு இணையத்தின் ஊடாக மருத்துவர்களின் ஆலோசனைகளையும் பெறமுடியும்.

## மீள்சுழற்சி மூலம் சிறந்த சூழல்நேய தொழில் முயற்சிக்கான BWIO விருதை வென்ற தேசக்தி இ சொலியுசன்ஸ் நிறுவனம்



இலங்கையின் முன்னணி கழிவுப்பொருள் மீற்சுழற்சி நிறுவனமான தேசக்தி இ சொலியுசன்ஸ் நிறுவனம், Business World International Organization அமைப்பு ஏற்பாடு செய்த Business World International விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த சூழல் நேய தொழில்முயற்சிக்கான விருதை வென்றுள்ளது தேசக்தி இ சொலியுசன்ஸ் நிறுவனம்,

அப்புறப்படுத்தப்படுகின்ற பொலித்தீன்களை மீள்சுழற்சி செய்து பல்வேறு உற்பத்திகளை மேற்கொண்டு வருகிறது. 2007ஆம் ஆண்டில் பிளாஸ்ரிக், பொலித்தீன், கடதாசி மற்றும் காகித அட்டை போன்ற அப்புறப்படுத்தப்படுகின்ற கழிவுப்பொருட்களை மீள்சுழற்சி கம்பனிகளுக்கு விற்கும் பணியின் மூலம் தமது தொழில்முயற்சியை தொடங்கிய தேசக்தி இ சொலியுசன்ஸ் நிறுவனம் தற்போது எமது நாட்டு கைத்தொழிற்சாலைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்ற பொலித்தீன்களை மீள்சுழற்சிக்குட்படுத்தி பல்வேறு முடிவுப்பொருட்களை உற்பத்தி செய்து சுற்றாடலை காப்பதில் பெரும் பங்காற்றுகின்றது. காபேஜ் பேக், ரியுப்லின் பேக், பயிர்களை நாட்டும் பேக், ஷொப்பிங் பேக் மற்றும் ஒரு அங்குலத்திலிருந்து 48 அங்குலம் வரையான சகல பொலித்தீன் உற்பத்திகள் மேற்படி உற்பத்திகளில் அடங்கும்.

தங்கொடுவவில் அமைந்துள்ள 24 மணித்தியாலங்களும் இயங்கும் தேசக்தி இ சொலியுசன்ஸ் கைத்தொழிற்சாலையில் மீள்சுழற்சியின் மூலம் நாளொன்றுக்கு 3000 கிலோ பொலித்தீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காப்புறுதித் துறையில் அதிக விருதுகளை வென்றெடுத்த AIA இன்ஷூரன்ஸ்!



மிகச்சிறந்த விற்பனைத் திறனை அங்கீகரித்துக் கௌரவிக்கும் இலங்கையில் இடம்பெறும் முதன்மையான நிகழ்வான SLIM தேசிய விற்பனை விருதுகளின் போது மீண்டும் ஒரு முறை AIA இன் மிகச்சிறந்த விற்பனைத் தொழில்சார் நிபுணர்கள் தங்களின் அதிசிறந்த விற்பனைத் திறமைக்காக நான்கு தங்கம் மற்றும் நான்கு வெள்ளி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர். AIA இன் மிகவும் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த விற்பனைத் தொழில்சார் நிபுணர்கள் அணி எப்போதும் தரமான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதில் சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியினை வெளிப்படுத்தியிருப்பது உண்மையில் இவ்வெற்றிக்கான மற்றுமொரு சான்றாகவே அமைந்துள்ளது.

2021/2022 காலப்பகுதியில் மிகச்சிறந்த மற்றும் தரமான செயற்திறனை வெளிப்படுத்தியிருந்த AIA இன் வெற்றியாளர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்ததோடு இந்த நிகழ்வின் மிகவும் உயர்வான கௌரவமிக்க விருதுகளில் ஒன்றான (2021) வருடத்திற்கான மிகச்சிறந்த பெண் விற்பனையாளருக்கான அதிசிறந்த விருது மற்றும் (2021) இற்கான பிரண்ட் லைனர் (முதன்மையான மற்றும் அத்தியாவசியமான) பிரிவில் தங்க விருது ஆகியவற்றை சஞ்சீவனி சோமரத்ன வெற்றி பெற்றிருந்தார். பிராந்திய முகாமையாளர் (2021) பிரிவில் விநோல் பிரியசெனரத் தங்க விருதினை வெற்றி பெற்றிருந்ததோடு நவீந்ரா நாரன்கொட பிராந்திய முகாமையாளர் (2022) பிரிவில் தங்க விருதைத் தனதாக்கியிருந்தார். வெள்ளி விருதுகளை விற்பனை மேற்பார்வையாளர் (2021) பிரிவில் கிரிஷான் தசநாயக்கா மற்றும் தக்ஷிலா கொரலாகே ஆகியோர் வெற்றி பெற்றிருந்ததோடு பிரண்ட் லைனர் (முதன்மையான மற்றும் அத்தியாவசியமான) பிரிவு (2021) மற்றும் (2022) ஆகியவற்றை பிரியதர்ஷனி பண்டாரநாயக்க மற்றும் ரோஷிக சொய்ஷா ஆகியோர் தனதாக்கியிருந்தனர்.

இந்த விருதுகள் மிக உயர்தரமான வாடிக்கையாளர் சேவையினை உறுதி செய்வதில் AIA இன் விற்பனைத் தொழில்சார் நிபுணர்கள் மேற்கொண்ட கடின உழைப்பு மற்றும் ஆர்வத்தினைச் சான்று பயக்கின்றது. அதிகரித்துச் செல்லும் மிகவும் போட்டித் தன்மையான தற்போதைய காப்புறுதிச் சூழலில் வாடிக்கையாளர்கள் தங்களது வாழ்க்கையினை முழுமையாக வாழ்வதற்கு உதவும் வகையில் AIA அவர்களுக்கு கட்டாயமான மற்றும் ஒரு குறிப்பிட்ட காப்புறுதித் திட்டத்தினை மட்டும் வழங்காமல் அனைத்தையும் உள்ளடக்கிய பரிபூரணமான காப்பீட்டுத் திட்டங்களையே வழங்கி வருகின்றது. காப்புறுதித் துறையில் AIA நிறுவனம் சிறந்து விளங்குவதற்கான இந்த அர்ப்பணிப்பானது விருதுகளை வெற்றி பெற்ற விற்பனை அணியில் பிரதிபலிக்கின்றது.




தொலைக்காட்சியில் சிறந்த ஆக்கத்திறன் மற்றும் திறமைகளை ஊக்குவித்து கொண்டாடும் வகையில் SLT-MOBITEL இனால் வலுவூட்டப்பட்ட ரைகம் டெலி விருதுகள் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் முன்னணி தொலைக்காட்சி நட்சத்திரங்களின் பிரசன்னத்துடன் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது, தொடர்ச்சியாக 3ஆவது ஆண்டாகவும் இலங்கையின் கலை மற்றும் கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வின் உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பாடல் பங்காளராக தொடர்ச்சியான 3ஆவது ஆண்டாகவும் SLT-MOBITEL கைகோர்த்திருந்தது. அத்துடன், ரைகம் டெலிஸ் நிகழ்வின் பிரதான அனுசரணையாளராகவும் இணைந்திருந்தது.

ரைகம் குரூப் தவிசாளர் கலாநிதி ரவி லியனகே அடங்கலாக, SLT-MOBITEL அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். 19ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் தொனிப்பொருளாக 'Let's revive' என்பது அமைந்திருந்ததுடன், ஜனகாத விருதுகள் அடங்கலாக 60 விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. நடிகர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் மற்றும் இதர அதிகாரிகளின் சந்திப்பு இடம்பெற்ற மாபெரும் நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

# கிழக்கில் இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகை நிகழ்வுகள்



சர்வதேச பிறை அடிப்படையில் இடம்பெற்ற புனித 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் வெள்ளிக்கிழமை (21) கல்முனை ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி சாபித் (ஷரயி, ரியாதி) தலைமையில் இடம்பெற்றது. (எஸ்.அஷ்ரப்கான்)





பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகை மற்றும் குத்பா பிரசங்க நிகழ்வுகளின்போது... (பாலமுனை செய்தியாளர்)





அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கிண்ணியா கிளை ஏற்பாடு செய்த பிரதான திடல் தொழுகை குறிஞ்சாக்கேணி வி.சி. மைதானத்தில் சனிக்கிழமை(22) இடம்பெற்றது. இதன்போது பெருநாள் உரையினை அதன் தலைவர் நஸார் மௌலவி நிகழ்த்தினார். மேலும் சமாதானம், அன்பு, பரஸ்பரத்தை புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வெந்நிறப் புறாக்களும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பால் பறக்கவிடப்பட்டது. (கிண்ணியா, சீனாக்குடா செய்தியாளர்கள்)



புனித ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகை மருதமுனை கடற்கரை திறந்தவெளியில் சனிக்கிழமை (22) நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தை மௌலவி அஷ்-ஷெய்க் ஏ.ஆர்.நுவீஸ் (மக்கி) நடத்தினார். (பெரியநீலாவணை, மருதமுனை செய்தியாளர்கள், பாறுக் ஷிஹான்)



நோன்புப் பெருநாள் கூட்டுத்திடல் தொழுகை சனிக்கிழமை (22) காலை வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மைதானத்தில் பிரதேசத்தின் 8 பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் முகம்மது இப்றாகிம் சீனிமுகமட் தலைமையில் நடைபெற்றது. இதன்போது 8 பள்ளிவாசல்களின் மகல்லாவாசிகள் உட்பட மௌலவி பேஸ்இமாம் ஏ.எல்.முசாமில் முகைதீன் கலந்துகொண்டு தொழுகையினை மேற்கொண்டிருந்தார்.


(வாழைச்சேனை, கல்குடா செய்தியாளர்கள்)



இறக்காமம் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடுசெய்த நோன்புப் பெருநாள் தொழுகை இறக்காமம் குளக்கரை விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (22) நடைபெற்றது. இதன்போது பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் இறக்காமம் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஏ.கே.அப்துல் ரவூப் மௌலவி நிகழ்த்தினார். (அட்டாளைச்சேனை செய்தியாளர்)



வாழைச்சேனை - செம்மண்ணோடை குபா ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடுசெய்த புனித நோன்புப் பெருநாள் தொழுகை சனிக்கிழமை (22) செம்மண்ணோடை அல்-ஹம்ரா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பெருநாள் சொற்பொழிவை வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் இஸ்லாமிய அழைப்பாளருமான அஷ்-ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி நிகழ்த்தினார். (மீராவோடை செய்தியாளர்)





புனித நோன்புப் பெருநாள் விசேட கூட்டுத்தொழுகை ஏறாவூர் முகைதீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை இடம்பெற்றது. (ஏறாவூர் செய்தியாளர்)





நிந்தவூர் ஜாமிஉத் தௌஹீத் ஜும்ஆப் பள்ளி வாசலின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் தொழுகையும் பெருநாள் குத்பாவும் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை மைதானத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்றது. பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் மௌலவி இத்ரீஸ் ஹஸன் (ஸஹ்வி) பெருநாள் தொழுகையை நடத்தினார். (எருவில் செய்தியாளர்)



கல்முனை ஹூதா ஜும்ஆப் பள்ளிவாசல், முஹம்மதிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியன இணைந்து ஏற்பாடுசெய்த நோன்புப் பெருநாள் தொழுகை ஹூதா திடலில் சனிக்கிழமை (22) இடம்பெற்றது. இதன்போது தொழுகையும் குத்பா பிரசங்கமும் மௌலவி எஸ்.எல்.எம்.நிக்றாஸ் (தவ்ஹீதி) நிகழ்த்தினார்.

(எஸ்.அஷ்ரப்கான், மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனை பதுறியா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்த புனித நோன்புப் பெருநாள் தொழுகை பள்ளிவாசல் வளாகத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்றது. நோன்புப் பெருநாள் தொழுகை மற்றும் சொற்பொழிவினை பள்ளிவாசல் பேஸ்இமாம் மௌலவி எம்.எல்.தாஜுதீன் ஹாமி நடத்தினார். (மீராவோடை செய்தியாளர்)





புனித நோன்புப் பெருநாள் தொழுகை அட்டாளைச்சேனை, கோணாவத்தை மு:ஃமினீன் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் திறந்தவெளியில் மௌலவி எஸ்.சபீர் தலைமையில் சனிக்கிழமை (22) இடம்பெற்றது. (அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)





புனித நோன்புப் பெருநாள் தொழுகை சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை(22) இடம்பெற்றது. தொழுகையும் துஆப் பிரார்த்தனையும் பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா ரஷாதியினால் நிகழ்த்தப்பட்டதுடன், ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், பொருளாளர் ஏ.சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (பொலிவேரியன் செய்தியாளர்)









புனித நோன்புப் பெருநாள் தொழுகை அந்நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை(22) இடம்பெற்றது. இதன்போது தொழுகையும் குத்பா பிரசங்கமும் மாளிகைக்காடு பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது அல்- அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் அல்- அக்ஸா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.ஆர்.எம். றியாஸ் (பஹ்மி) நிகழ்த்தினார். சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள் தோட்ட திடலில் இடம்பெற்றது. பெருநாள் பிரசங்கத்தை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ஆசிரியர் மௌலவி ஏ.ஹலீலுர் ரஹ்மான் (ஸலபி) நிகழ்த்தினார். மேலும் இதன்போது ஒருவருக்கொருவர் தமது அன்பை பரிமாறிக் கொண்டதுடன் காலமான தமது உறவுகளுக்காக ஜனாஸா மையவாடிகளை துப்புரவு செய்து துஆப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)

# சாய்ந்தமருதில் முன்னறிவித்தலின்றி நீர்வெட்டு: மக்கள் அசௌகரியம்

(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருதில் எந்த முன்னறிவித்தலுமின்றி, அடிக்கடி நீர்வெட்டு இடம்பெறுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் புனித நோன்பு காலமான ரமழானில் மிகுந்த இன்னல்களை அனுபவித்ததோடு, உரிய நேரத்தில் செய்யவேண்டிய கடமைகளைக்கூட சரியான நேரத்தில் நிறைவேற்ற முடியாத கஷ்ட நிலைமையை அனுபவித்ததாக மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

காலநேரமின்றி, எந்தவித முன்னறிவிப்புமின்றி ஒவ்வொரு நாளும் ஒரு நாளுக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேல் நீர்வெட்டை மேற்கொள்கின்றனர். இப்பிரதேசத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, மாநகர சபை உறுப்பினர்கள் இருந்தும் இவ்விடயத்துக்கு தீர்வைப் பெற்றுத் தர முடியாது பராமுகமாக இருப்பதாகவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, பெருநாள் காலம் என்பதாலும், உரிய நேரத்தில் கடமைகளைச் செய்யவேண்டி இருப்பதாலும், இது விடயத்தில் கூடிய கரிசனை எடுத்து, இதற்கான தக்க தீர்வை அவசரமாகப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பாடசாலை வகுப்பறைகளில் புழுக்கம் காரணமாக மாணவர்கள் அசௌகரியம்

(பாண்டிருப்பு செய்தியாளர்)

கிழக்கில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நாளுக்குநாள் கடும் வெப்பம் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்கள் வகுப்பறைகளில் அதிக புழுக்கம் காரணமாக அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இங்குள்ள பல பாடசாலைகளில் மின் விசிறிகள் இல்லாதிருப்பதுடன், சில பாடசாலைகளில் மின் விசிறி இருந்தும் அவை பழுதடைந்து காணப்படுவதனால் மாணவர்கள் வெப்பம் நிலவும் இக்காலப்பகுதியில் சுமுகமான கற்றலில் ஈடுபட முடியாதுள்ளனர்.

இது குறித்து பிரதேச வலயக்கல்வி அலுவலகங்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலை வகுப்பறைகளில் மின் விசிறிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மாணவர்கள் வெளியில் தேவையற்ற விதத்தில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொண்டால் வெப்பத்தினால் உண்டாகும் தோல் நோய்கள் மற்றும் ஏனைய நோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளின் நான்காம் ஆண்டு நினைவாக 'எங்கள் உதிரம் கொண்டு அஞ்சலி செலுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட இரத்த தான முகாம் மண்முனை வடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை (21) தாண்டவன்வெளி பெடினன்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. (கல்லடி செய்தியாளர்)

# கிழக்கில் வெள்ளரிப்பழச் செய்கையில் வீழ்ச்சி

(பாண்டிருப்பு செய்தியாளர்)

கிழக்கில் கோடை காலத்தில் தாகம் தீர்க்கும் பழமான வெள்ளரிப்பழச் செய்கையானது இம்முறை வீழ்ச்சியடைந்துள்ளது. வெள்ளரிப்பழச் செய்கையை மேற்கொள்ளும் பலர் இம்முறை அச்செய்கையைக் கைவிட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் கிராமத்தில் வெள்ளரிப்பழச் செய்கை அதிகம் மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்தம் சித்திரை தொடக்கம் ஜூலை வரையான காலப்பகுதியில் கடும் வெப்பம் நிலவுவதினால் மக்கள் தாகம் தீர்க்கும் வெள்ளரிப்பழத்தை ஆர்வத்துடன் வாங்கிச் செல்வது வழக்கமாகும்.

இதனால் இப்பழச் செய்கையாளர்கள் இலாபம் ஈட்டிவந்தனர். இவ்வருடம் இங்கு வெள்ளரிப்பழச் செய்கையை மேற்கொண்ட பலர் அதனைச் செய்யாது கைவிட்டுள்ளனர். குறிப்பிட்ட ஒருசிலர் மாத்திரம் இச்செய்கையை மேற்கொண்டுள்ளனர். இதன் காரணமாக வெள்ளரிப்பழத்துக்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

வெள்ளரிப்பழச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் விவசாயம் சார்ந்த திணைக்



களங்களினால் எவ்வித ஊக்குவிப்பு உதவிகளும் வழங்கப்படுவதில்லை எனவும் பழச் செய்கைக்கான உற்பத்திச் செலவு வீதம் அதிகரித்துள்ளதாகவும் உரங்களின் விலை அதிகரிப்பு மற்றும் உற்பத்திக்கு ஏற்ற சந்தைப்படுத்தல் இன்மை உள்ளிட்ட பல காரணங்களினால் இச்செய்கையைக் கைவிடும் நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் வெள்ளரிப்பழச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காலத்துக்கேற்ப உற்பத்திசெய்யப்படும் இவ்வாறான பழச்செய்கைகளை ஊக்குவிப்பதற்கும் விவசாயிகளுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வெள்ளரிப் பழச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நடைமுறையிலுள்ள பயங்கரவாதச் சட்டத்தைவிடவும் இறுக்கமான சட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சி

## மூவின மக்களும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் நகுலேஸ் வேண்டுகோள்

(மட்டக்களப்பு செய்தியாளர்)

புதிய பயங்கரவாதச் சட்டத்தால் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மேலும் பல கஷ்டங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும்.

ஏற்கனவே இலங்கையில் நடைமுறையிலிருக்கின்ற பயங்கரவாதச் சட்டத்துக்கு மாற்றீடாக இலங்கை அரசால் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படுகின்றது. இது தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதச் சட்டத்தைவிடவும் மிகவும் இறுக்கமான சட்டமாகக் காணப்படுகின்றது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் நா.நகுலேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி நகர் பகுதியில் இவ்விடயம் தொடர்பிலான துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை (23) முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இதனால் தொலைபேசி, இணையத்தளங்களை முடக்குதல், தனி நபர்களைக் கைதுசெய்தல் போன்றனவெல்லாம் அச்சட்டத்தில் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் மாத்திரமன்றி, முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

அரசாங்கம் 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக அன்றையதினம் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களும் தங்களது வர்த்தக நிலையங்களை மூடி தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

புதிய சட்டத்தில் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு முழு அதிகாரங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மேலும் பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.

தொலைபேசி, இணையத்தளங்களை முடக்குதல், தனிநபர்களை கைதுசெய்தல்



போன்றனவெல்லாம் அதில் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் மாத்திரமன்றி, முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள். இவ்வாறான சட்டங்களைப் பயன்படுத்தியே தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பௌத்தமயமாக்கல்களையும் மேற்கொண்டு வருகின்றார்கள். இதனை தமிழ் மக்களாகிய நாம் எதிர்க்க முடியாத நிலையில் அரசு இதனைக் கொண்டுவருகிறது. எனவே, இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து இன மக்களும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். இதனை ஆதரிக்கக்கூடாது.

இதன்போது களுவாஞ்சிக்குடி நகர்ப் பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள் மற்றும் பிரயாணிகளுக்கு இது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

# மட்டக்களப்பில் விசேட தேவையுடைய பராமரிப்பு நிலையத்தில் வாய்ப்பேச முடியாத இரு சிறுமிகளை கட்டிவைத்து சித்திரவதை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிலையம் ஒன்றில் இரு வாய்ப்பேச முடியாத சிறுமிகளின் கைகளையும் கால்களையும் கயிற்றினால் கட்டிவைத்து சித்திரவதை செய்த சம்பவம் தொடர்பாக வெளியாகியுள்ள வீடியோ பதிவு தொடர்பாக பொலிஸார் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் குறித்த பராமரிப்பு நிலையத்துக்கு வியாழக்கிழமை (20) சென்று விசாரணைகளை மேற்கொண்டதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக பராமரிப்பு நிலையத்தில் 22 பெண்கள், 04 ஆண்கள் உட்பட 26 சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அண்மையில் அங்குள்ள ஒரு சிறுமியின் இரு கைகளையும் பின்பக்கமாகவும் இரு கால்களையும் கயிற்றினால் கட்டி அறையில் வைக்கப்பட்ட காட்சியும் இன்னுமொரு சிறுமியை இரு கைகளையும் கயிற்றால் கட்டி ஊஞ்சல் ஒன்றில் கட்டிவைத்து சித்திரவதை செய்த வீடியோ காட்சிகள் சில ஊடகங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் வெளியாகின.

## பொலிஸார், மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் விசாரணைகள் முன்னெடுப்பு

இதனையடுத்து, பொலிஸார் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இதில் வாய்ப்பேச முடியாத இரு பிள்ளைகளையே இவ்வாறு கட்டிவைத்து சித்திரவதை செய்துள்ளதாகவும் அங்கு கடமையாற்றிவரும் சிலர் சிறுவர்களுக்கு நன்கொடையாளர்களால் வழங்கப்பட்ட பாவனைப் பொருட்களை திருடிச் செல்வதாகவும் அதனை கண்டுபிடித்து அவர்களை எச்சரித்த கோபத்தினால் இவ்வாறு செய்துள்ளதாக பராமரிப்பு நிலையப் பொறுப்பாளர் கூறியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேநேரம் அங்கு கடமையாற்றும் 3 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்கள் வீட்டுக்குச்சென்ற நிலையில் அவர்களின் வாக்குமூலங்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னரே இந்த சித்திரவதை செய்தவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஆயித்தியமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் கரவெட்டியாறு விஜிதா வித்தியாலய பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன இணைந்த கரங்கள் அமைப்பினால் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு ஆயித்தியமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் துரைச்சாமி வித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், எஸ்.காந்தன், துலக்சன், தெ.சிருஸ்காந் ஆகியோர் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

மேலும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்



வி.வசந்தராசா, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.கலைவாணி, ஆசிரியர்களான எஸ்.மதுசூதன், எஸ்.சதகுகன், இ.கேதிஸ்வரி, என்.விஜய அனிதா, எஸ்.செல்வேந்திரா ஆகியோருடன் கரவெட்டியாறு விஜிதா வித்தியாலய ஆசிரியர்களான எஸ்.டனுஸ்கா, வினோதா, பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# போடியார் புலம்பல்!



கோட்டா கோ கம போராட்டத்த நடத்திய முக்கியமான ஒருவர் கருணாரத்தின என்ற சிங்களப்பொடியன் தற்கொலை செய்துகொண்டதாக ஒரு செய்திவந்தது எலுவா? படுகொலையாளிய விரட்டப்போய் தற்கொல செய்யிற நிலம இந்தப் பொடியனுக்கு வந்தது எண்டா கொஞ்சம் சிந்திக்கோணும்! கோட்டாவ துரத்தப்போன ஆக்கள் இலக்கு வைச்சு இப்ப ஏதோ ஒரு ரூபத்தில எச்சரிக்க நடக்கிது எண்டதத்தான் இந்த தற்கொல நிருபிக்குது எலுவா.? நல்லவேள நம்மட வடக்கு கிழக்கு தமிழ் பொடியனுகளையும் அந்த போராட்டுத்துக்கு போகச்சொன்ன மேதாவிகளிட கதய கேட்டிருந்தா அதோகதிதான்.!

# அழிந்துவரும் அரியவகை ஆமைக் குஞ்சுகளை பாதுகாக்கும் நடவடிக்கை

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் புறாமலை பகுதியில் அதிகளவிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. சுற்றுலாப் பயணிகள் நடமாடும் கடலோரங்களில் மண்ணுக்குள்ளே விடுகின்ற ஆமை முட்டைகள் சேதமடைந்து வருவதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அழிந்துவரும் அரியவகை ஆமைகளின் 150 ஆமைக் குஞ்சுகளைப் பாதுகாத்து மீண்டும் சனிக்கிழமை(22) மாலை கடலில் விடப்பட்டுள்ளன.

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் புறாதீவுப் பகுதியின் பொறுப்பதிகாரி மஞ்சுள மொரத்தன்ன தலைமையின்கீழ் ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன. திருகோணமலை புறாமலைப் பகுதியில் அன்றாடம் சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிகளுக்கு வருகைதருகின்றனர். இந்நிலையிலேயே இந்த ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்கக்கோரி வடக்கு, கிழக்கில் நாளை ஹர்த்தால் அனுஷ்டிப்பு

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் ஆதரவு

(கல்லடி செய்தியாளர்)

ஜனநாயகத்தை படுகொலை செய்யும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்கக்கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை செவ்வாய்க்கிழமை(25) இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் தமது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வூடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டு மக்களையும் மாற்று அரசியல் சிந்தனையாளர்களையும் சமூக அரசியல் செயற்பாட்டாளர்களையும் அடக்கி ஒடுக்கி, நாட்டுக்குள் காட்டு அரசாங்கமொன்றை அமைக்கும் செயற்பாடாகவே இச்சட்டம் அரங்கேறவுள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து, மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற அரச ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்காதவாறு இருக்கும் சட்டத்தை, இன்னும் பயங்கரமாக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் கொண்டுவரும் அதிகார வர்க்கத்தின் சூழ்ச்சிகளை முறியடிக்க நாட்டு மக்களும், ஜனநாயகத்தை மதிக்கின்ற சகல சமூக, அரசியல் சக்திகளும் கைகோர்த்துக் கொள்ளவேண்டும்.

அந்த வகையில், நாளைய தினம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி முழுமையான ஆதரவை வழங்கும். ஒருகாலத்தில் தமிழ் மக்களையும் முற்போக்கு அரசியல் செயற்பாட்டாளர்களையும் இலக்குவைத்து உருவாக்கப்பட்ட பயங்கரவாதச் சட்டம் அண்மைக்காலங்களாக சிங்கள மக்களையும் இளைஞர்களையும் இலக்குவைக்கப்பட்டபோது அதன் பயங்கரத்தை உணர்ந்தவர்களாக புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக இன்று கிளர்ந்தெழுந்துள்ளார்கள். முழு நாட்டு மக்களும் இச்சட்டத்தின் காட்டுமிராண்டித்தனத்தை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

இச்சட்டம் நிறைவேற்றப்படுமானால், மக்கள் சுதந்திரமாக மூச்சு விடுவதற்கான உரிமை கூட பறிக்கப்படலாம். ஆட்சியாளர்களின் அடாவடித்தனத்துக்கெதிராக குரல்கொடுக்க முடியாமல் போகலாம். உலக நாடுகளில் நமது நாடு அந்நியப்பட்டுக்கூட போகலாம். ஆகவே, பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும்போது மக்கள் பிரதிநிதிகள் மக்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ள வேண்டும். அதன் மூலமாகவே ஜனநாயகத்தை அழியாது பாதுகாக்க முடியும் எனவும் அவ்வூடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு அறிவுறுத்தலை பின்பற்றாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சுகுணன்



(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு பரவல் இடம்பெறக்கூடியதற்கான சாதகமான சூழல்கள் காணப்படுகின்றன. அதனை முன்கூட்டியே தடுப்பதற்காக விரிவானதும் துரிதமானதுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் எமது அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்வோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

டெங்கு பரவல் மிக மோசமான விளைவைத் தரக்கூடியன. ஆயினும், அதனை கட்டுப்படுத்த முடியும். கடந்த காலத்தில் நாம் அதனை செய்து காட்டியிருக்கிறோம். ஆயினும், அதற்கு மக்களின் பரிபூரண ஒத்துழைப்பு மிக அவசியமாகும்.

இதற்காக, மக்களோடு மக்களாக களத்தில் நின்று எமது அனைத்து உத்தியோகத்தர்களும் பணியாற்றிவருகிறார்கள். பாழடைந்து கிடக்கும் வளவுகள், கட்டிடங்கள் கிணறுகள், குப்பைகள் என்பன அதன் உரிமையாளர்களால் துப்புரவுசெய்யப்பட வேண்டும், அதற்காக சிவப்பு நிற எச்சரிக்கை பதாகைகள் ஒட்டப்படுகின்றன.

கடந்த வருடத்தில் எமக்கு இடையூறுகளைத் தந்த இருதயபுரம், கோட்டைமுனை, வெட்டுக்காடு, கொக்குவில் பிரதேசங்கள் என்பனவற்றில் நாம் போதிய கவனம் செலுத்திவருகிறோம். எமது ஆலோசனைகளை பின்பற்றாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

# உலக செய்திகள்

# சூடானில் மக்களாட்சி: இராணுவத் தளபதி உறுதி!

## வெளிநாட்டினர் - தூதுவர்கள் பத்திரமாக வெளியேற்றம்: பணியை தொடங்கியது இராணுவம்



''சூடானில் பொதுமக்கள் தலைமையிலான மக்களாட்சி அரசாங்கம் உருவாக இராணுவம் ஆதரவளிக்கும்'' என அந்த நாட்டின் இராணுவத் தளபதி அப்தெல் பட்டா புர்ஹான் உறுதியளித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பு போரை நிறுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

அத்தோடு சூடானிலிருக்கும் பல்வேறு நாடுகளின் தூதுவர்களையும், வெளிநாட்டவர்களையும் வெளியேற்றும் பணி தொடங்கியுள்ளதாக அந்நாட்டு இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடான சூடானில் தற்போது இராணுவ ஆட்சி நடந்துவருகிறது. அங்கு மக்களாட்சியை கொண்டுவர கோரி இராணுவத்துக்கும், துணை இராணுவப் படையினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றுவருகிறது. கடந்த வாரம் இந்த மோதல் தீவிரமடைந்து உள்நாட்டுப் போராக மாறியது.

எனவே, இரு தரப்பினரும் துப்பாக்கிகள், வெடிகுண்டு உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களைக்கொண்டு பரஸ்பரம் தாக்கினர். இதில் அப்பாவி பொதுமக்கள் உட்பட 413 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். 3,500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

போர் எதிரொலியாக சூடானிலிருக்கும் தங்களது நாட்டு மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டுள்ளதால் அவர்களை வெளியேற்றுவதில் சிக்கல் நீடித்து வருகின்றது.

சூடானில் நடந்துவரும் இந்த உள்நாட்டுப் போர் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. எனவே, போரை நிறுத்தும்படி ஐ.நா. சபை வலியுறுத்தியது. அதன்பேரில் ரமழான் நோன்பு பெருநாளை முன்னிட்டு 3 நாட்கள் போரை நிறுத்திவைக்க இரு தரப்பு இராணுவத் தளபதிகளும் சம்மதம் தெரிவித்தனர்.

இந்நிலையில், சூடானிலிருக்கும் அமெரிக்கா, பிரித்தானியா, சீனா மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் மற்றும் தூதரக அதிகாரிகளை இராணுவ விமானங்களில் நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைத்து வருவதாக சூடான் இராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்நாட்டின் தலைவர்களுடன் இராணுவத் தளபதி அப்தெல் ஆலோசித்து வருவதாகவும் சூடான் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. சூடான் இராணுவத் தளபதி ஜெனரல் அப்தெல் பட்டாக் புர்ஹான் தெரிவிக்கையில்,

''சவூதி அரேபியாவைச் சேர்ந்த தூதரக அதிகாரிகள் ஏற்கனவே போர்ட் சூடானிலிருந்து விமானம் மூலமாக அந்நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். ஜோர்தான் தூதரக அதிகாரிகளும் இதேபோல் வெளியேற்றப்படுவார்கள்'' - என்றார்.

இந்நிலையில், சூடானில் பொதுமக்கள் தலைமையிலான மக்களாட்சி அரசாங்கம் உருவாக இராணுவம் ஆதரவளிக்கும் என அந்த நாட்டின் இராணுவத் தளபதி அப்தெல் பட்டா புர்ஹான் உறுதியளித்துள்ளார்.

# 'ஹை ஹீல்ஸ்' அணிந்துவந்த கனடா ஆண் எம்.பிக்கள்




கனடா பாராளுமன்றத்தில் ஆண் எம்.பிக்கள் பிங்க் நிற 'ஹை ஹீல்ஸ்' அணிந்துவரும் வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

கனடாவில் பெண்கள் தங்குமிடத்திற்கு நிதியை திரட்டுவது, பாலின அடிப்படையில் வன்முறை குறித்து ஆண்களும், சிறுவர்களும் அறிந்துகொள்வதை நோக்கமாகக்கொண்டு கடந்த 4 ஆண்டுகளாக ஹோப் இன் ஹை ஹீல்ஸ் பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக ஆண் எம்.பிக்கள் பிங்க் நிறத்தில் கட் ஷூ அணிந்து பிரசாரத்தை மேற்கொண்டனர்.

# தனது நகரத்தின் மீது தானே குண்டு வீசிய ரஷ்ய விமானப்படை



ரஷ்யாவில் வெடிகுண்டு பீதியால் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

உக்ரைன் எல்லைக்கு அருகிலுள்ள பெல்கோரோட் என்ற நகரில் ரஷ்யப் போர் விமானம் தவறுதலாக வெடிகுண்டை வீசியதாகக் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அந்த வெடிகுண்டை செயலிழக்கச் செய்ய அதிகாரிகள் திட்டமிட்டனர். இதற்காக அப்பகுதியிலுள்ள 17 அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் வசிக்கும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை வெளியேற்றினர்.

பின்னர், மைதானமொன்றில் குறித்த வெடிகுண்டு வெடிக்க வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் வீடுகளுக்குத் திரும்பினர். கடந்த வியாழன்று ரஷ்யாவின் சுகோய் 34 ரக விமானம் பெல்கோரோட் நகர் மீது தவறுதலாக குண்டு வீசியதில் 3 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்கை டைவிங் செய்த 101 முதியவர்கள்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நடைபெற்ற ஸ்கை டைவிங் போட்டியில் 60 வயதுக்கு மேற்பட்ட ஏராளமான முதியவர்கள் உலக சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

''ஸ்கை டைவர்ஸ் ஓவர் சிக்ஸ்டி'' எனப் பெயரிடப்பட்ட இந்தக் குழுவினர் நடுவானில் ஸ்கை டைவிங் செய்து இரண்டு உலக சாதனைகளை முறியடித்தனர். 60 முதல் 78 வயதுக்குட்பட்ட 101 முதியவர்கள் தங்களின் 4ஆவது முயற்சியில் ஸ்னோஃப்ளேக் வடிவத்தை உருவாக்கினர்.

# வடகொரிய ஏவுகணையை சுட்டுவீழ்த்த தயார் – ஜப்பான்

முதல் இராணுவ உளவு செயற்கைக் கோளை செலுத்தத் தயாராகவுள்ளதாக வடகொரியா அறிவித்த நிலையில், அந்நாட்டின் பொலிஸ்ரிக் ஏவுகணையை சுட்டு வீழ்த்தத் தயாராக இருக்குமாறும் இராணுவத்திற்கு ஜப்பான் உத்தரவிட்டுள்ளது.

2012 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில், செயற்கைக்கோள்கள் ஏவுவதாகக்கூறி பொலிஸ்ரிக் ஏவுகணைகளை வட கொரியா ஏவி சோதித்த நிலையில், அந்த இரு ஏவுகணைகளும் ஜப்பானின் ஒகினாவா தீவு வழியே சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், செயற்கைக்கோளை செலுத்த உள்ளதாக வடகொரியா அறிவித்துள்ள நிலையில், ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் நடவடிக்கைகளுக்கு உத்தரவிட வாய்ப்புள்ளதாக இராணுவத்திடம் ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஹமாடா தெரிவித்துள்ளார். ஏவுகணையின் சேதத்தைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இராணுவத்திற்கு ஹமாடா அறிவுறுத்தியுள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இலங்கை ரக்பியை மீட்டெடுக்கப் போவதாக அமைச்சர் உறுதி




ஓகஸ்ட் முதல் வாரத்தில் தேர்தலை நடத்தி இலங்கை ரக்பி நிர்வாகத்தை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆசிய ரக்பி தலைவர் கைஸ் அல் தலாயிடம் உறுதியளித்துள்ளார்.

நிர்வாகத் தடையில் இருந்த இலங்கை ரக்பியின் இந்நிலையை மீட்டெடுக்க விளையாட்டு அமைச்சர் சமீபத்தில் ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமித்தார்.

ஏப்ரல் 19 அன்று ஆசிய ரக்பி தலைவருடன் டுபாயில் நடைபெற்ற சந்திப்பின்போது, இலங்கை ரக்பி எதிர்கொள்ளும் நிர்வாக நெருக்கடியை அமைச்சர் ரணசிங்க விரிவாக விளக்கியதுடன், ரக்பி நிர்வாகத்தை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இலங்கை ரக்பி நிர்வாகப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஆசிய ரக்பி தலைவர் இதுவரை பணியாற்றிய விதம் குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் பாராட்டு தெரிவித்தார். இலங்கையில் ரக்பி விளையாட்டின் வளர்ச்சி மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளால் எதிர்வரும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தற்காலிக பின்னடைவைத் தீர்ப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

# 11 வருடங்களின் பின்னர் சேர்பிய வீரரிடம் தோல்வியடைந்த ஜோகோவிச்



ஸ்ர்ப்ஸ்கா ஓபன் காலிறுதியில் நோவக் ஜோகோவிச் 11 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக சேர்பிய நாட்டைச் சேர்ந்த ஒருவரிடம் தோல்வியடைந்தார்.

டுசான் லாஜோவிச் 6-4, 7-6 (6) என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று முதல் முறையாக உலகின் நம்பர் - 1 வீரரை வீழ்த்தினார்.

"இது எனது வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றி" என்று லாஜோவிக் கூறினார். "உணர்ச்சிகள் மிகவும் கலவையானவை, ஏனென்றால், நான் இங்கு சொந்த ஊருக்கு முன்னால் விளையாடுகிறேன், மேலும் நோலேவுக்கு எதிராகவும் விளையாடுகிறேன், அவர் ஒரு நல்ல நண்பரும் அவர் நம் நாட்டின் ஹீரோவும் ஆவார். அவரை அடிப்பது, இது சாத்தியம் என்று நான் நினைக்காத ஒன்று, ஆனால் அது நடந்தது."

ஜோகோவிச் 16 இடைவேளை வாய்ப்புகளில் ஒன்றை மட்டுமே மாற்றினார், மேலும் டைபிரேக்கரில் மூன்று செட் புள்ளிகளைத் தவறவிட்டார்.

இதற்கு முன்பு சக சேர்பியரிடம் 2012இல் ஜோன்கோ டிப்சரேவிச்சிடம் மாட்ரிட்டில் தோல்வியடைந்தார்.

"டுசான் ஓர் அற்புதமான நபர், சிறந்த மனிதர்" என்று ஜோகோவிச் கூறினார். "எனக்கு நீண்டகாலமாகத் தெரிந்த ஒருவர், அவர் தொழில்முறை டென்னிஸ் விளையாடத் தொடங்கியதிலிருந்து. டேவிஸ் கிண்ண அணியில் பல முறை ஒன்றாக, ஒன்றாக பயிற்சி பெற்றார். நேர்மையாகச் சொல்வதானால், நான் அவருக்கு மகிழ்ச்சியாக இருக்கிறேன். அவர் இன்று வெற்றி பெறத் தகுதியானவர்.

இந்த ஆண்டின் மூன்றாவது தோல்வியைத் தொடர்ந்து, ஜோகோவிச் அடுத்த வாரம் மாட்ரிட் ஓபனுக்கு செல்கிறார்.

# 60 இலட்சத்துக்கு வேட்டு வைத்த அர்த்தீப் சிங்




ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்கு எதிரான போட்டியில் அர்ஷ்தீப் சிங் வீசிய அடுத்தடுத்த பந்துகளில், ஸ்டம்புகள் உடைந்து தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

ஐபிஎல் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில், மும்பை மற்றும் பஞ்சாப் அணிகள் மோதின. இதில் மும்பை அணி வெற்றிபெற கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த கடைசி ஓவரை அர்ஷ்தீப் சிங் வீசினார். ஓவரின் முதல் இரண்டு பந்துகளில் ஒரு ஓட்டம் மட்டுமே விட்டுக்கொடுக்க, மூன்றாவது பந்தில் திலக் வர்மா கிளீன் போல்டானார்.

அர்ஷ்தீப் சிங் வீசிய அந்த துல்லியமான யார்க்கரின் மிடில் ஸ்டம்பானது இரண்டு துண்டுகளாக உடைந்தது. இதையடுத்து களமிறங்கிய நேஹல் வதேராவும், முதல் பந்திலேயே கிளீன் போல்டானார். அதுவும், திலக் வர்மாவிற்கு வீசப்பட்டதுபோன்ற துல்லியமான யார்க்கரில் இரண்டாவது முறையாகவும் ஸ்டம்ப் உடைந்தது. அர்ஷ்தீப் சிங்கின் இந்த அபார ஆட்டத்தால் பஞ்சாப் அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐபிஎல் தொடர் சர்வதேச தரத்தில் நடத்தப்படும் சூழலில், நடுவரின் எந்தவொரு சிறிய முடிவும் போட்டியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதன் காரணமாக உயர் தொழில்நுட்ப சாதனங்கள் மட்டுமே இந்தப் போட்டிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் ஐபிஎல் தொடரில் மைக் மற்றும் கெமரா வசதி அடங்கிய, எல்.ஈ.டி. ஸ்டம்புகள்தான் பயன்படுத்தபடுகின்றன. ஒரு செட் ஸ்டம்ப்களின் விலை 40 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். அதாவது இந்திய மதிப்பில் ரூ.30 இலட்சமாகும். அர்ஷ்தீப் சிங் வீசிய வெறும் இரண்டே பந்துகளால் இந்திய கிரிக்கெட் சம்மேளனத்திற்கு ரூ.60 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. துல்லியமாகக் கூற வேண்டுமென்றால் உடைந்த 2 ஸ்டம்புகளின் மதிப்பு மட்டும் ரூபா 24 இலட்சமாகும்.

கடந்த 2018ஆம் ஆண்டு 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரை வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த அர்ஷ்தீப் சிங், 2019ஆம் ஆண்டு பஞ்சாப் அணியால் ஒப்பந்தம் செய்யப்பட்டர். இதுவரை 44 ஐபிஎல் போட்டிகளில் விளையாடி 53 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியுள்ளார். ஒரு போட்டியில் 32 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதுதான் அவரது சிறந்த பந்துவீச்சாகும். தொடக்கத்தில் வெறும் ரூ.20 இலட்சத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட அர்ஷ்தீப் சிங்கின் ஊதியம், தற்போது ஒரு சீசனுக்கு ரூ.4 கோடியாக உயர்ந்துள்ளது. மும்பை அணிக்கு எதிராக சிறப்பாக செயல்பட்ட அவருக்கு, தற்போது பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

# பொதுநலவாய வீரர்களின் ஆயுட்காலம் நீடிப்பு

கொமன்வெல்த் விளையாட்டு சாதனையைப் பயன்படுத்தி, உயரடுக்கு விளையாட்டு வீரர்கள் மற்ற மக்களை விட ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வாழ முடியும் என்பதை UK இன் சர்வதேச நீண்ட ஆயுள் மையத்தின் ஓர் ஆய்வு கண்டறிந்துள்ளது.


மரதன் அல்லது ஸ்பிரிண்ட் உயரடுக்கு நிலை விளையாட்டு வீரர்கள் சராசரி மனிதனைவிட நீண்ட காலம் வாழ்கிறார்கள். 1930 ஆம் ஆண்டு போட்டியில் கலந்துகொண்டவர்களிடையே நடத்திய ஆய்வு மூலம் பிரிட்டிஷ் எம்பயர் கேம்ஸ் கண்டறிந்துள்ளது.

பேராசிரியர் லெஸ் மேஹூ மற்றும் ரே அல்கர் ஆகியோரால் நடத்தப்பட்டது, நீர்வாழ் விளையாட்டுகளில் ஆண் போட்டியாளர்களின் ஆயுட்காலம் 29 சதவிகிதம் அதிகரித்து 5.3 கூடுதல் வருடங்கள் வாழ்கிறது என்று கூறியது.

ஆண் தடகள வீரர்களுக்கு 25 சதவீதமும், உள்ளரங்கப் போட்டிகளில் 24 சதவீதமும் அதிகரித்துள்ளது.

அனைத்து விளையாட்டுப் பிரிவுகளிலும் பெண் போட்டியாளர்களின் ஆயுட்காலம் 22 சதவீதம் அல்லது 3.9 கூடுதல் வருடங்கள் உயர்த்தப்பட்டன.

"விளையாட்டு விளையாடுவது பலவிதமான ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது என்பதை நாங்கள் நீண்ட காலமாக அறிந்திருக்கிறோம், ஆனால், உயர்மட்ட விளையாட்டு உலகின் விளையாட்டு வீரர்களின் நீண்ட ஆயுளில் என்ன குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை எங்கள் ஆராய்ச்சி காட்டுகிறது" என்று மேஹூ கூறினார்.




குறைந்த தூரம் ஓடுபவர்களை விட நீண்ட தூர ஓட்டப்பந்தய வீரர்களுக்கு நீண்ட ஆயுளும், குத்துச்சண்டை வீரர்களை விட மல்யுத்த வீரர்களும் நீண்ட காலம் வாழ்வதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7